24 JUN 2004

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 10 வியாழக்கிழமை (24-06-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:212

# போலி ஆவணங்களைத் தயாரித்துவந்த 'மினி கச்சேரி' அரியாலையில் முற்றுகை!

## பெருந்தொகை சான்றிதழ்களுடன் மோசடிப்பேர்வழி கைது!



கைப்பற்றிய போலி ஆவணங்களுடன் சி.ஐ.டி.பொலிஸார்.


யாழ்ப்பாணம்,ஜூன்24

போலியான ஆவணங்கள், சான்றிதழ்களைத் தயாரித்து வழங்கிவந்தவர் என்று கூறப்படும் மோசடிப்பேர்வழி ஒருவரை யாழ். பொலீஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவினர் நேற்றுக் கைதுசெய்திருக்கின்றனர்.

அரியாலைப் பகுதியில் உள்ள அவரது இல்லத்தை முற்றுகையிட்ட பொலீஸார் அங்கிருந்து பெருந்தொகையான போலி ஆவணங்கள், சான்றிதழ்கள் மற்றும் இறப்பர் முத்திரைகள் என்பவற்றை மீட்டெடுத்திருக்கின்றனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் போலி ஆவணங்களைத் தயாரித்து விநியோகிக்கும் மோசடியில் சுமார் 14 வருடங்களுக்கு மேலாக ஈடுபட்டுவந்தவர் என்ற அதிர்ச்சித் தகவலையும் பொலீஸார் வெளியிட்டிருக்கின்றனர்.

போலியாகத் தயாரிக்கப்பட்ட அரச உயர் அதிகாரிகளின் உத்தியோகபூர்வ காகிதத் தலைப்புக்கள், அரச முத்திரையிடப்பட்ட - பூர்த்தி செய்யப்படாத - படிவங்கள், திணைக்களங்கள், சுகாதார அதிகாரிகள், கல்வித் துறை நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் (16ஆம் பக்கம் பார்க்க)



மீட்கப்பட்ட போலி ஆவணங்களில் ஒரு பகுதி...

## ஐ.தே.கட்சித் தலைமையைக் காப்பாற்றுவதற்காக

# எம்.பி. பதவியை நேற்று துறந்தார் அலி ஸாஹிர்!

## புலிகளின் தலைமைப்பீடத்துக்கும் அது குறித்துத் தகவல் தெரிவிப்பு



கொழும்பு,ஜூன்24

**புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட கருணாவுக்கு உதவினார் என்ற சர்ச்சையில் சிக்கிய ஐ.தே.கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பியான அலி சாஹிர் மௌலானா தமது எம்.பி. பதவியை நேற்று இராஜினாமாச் செய்தார். அவரது இராஜினாமாக் கடிதம் நேற்றே நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுவிட்டது.**

**அது குறித்து புலிகள் தலைமைப்பீடத்திற்கும் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.**

நேற்றிரவு அவர் சிங்கப்பூர் ஊடாக லண்டன் புறப்படவிருந்தார் என்று சில செய்தி வட்டாரங்கள் நேற்றுப் பிற்பகல் தகவல் வெளியிட்டன.

கருணாவுக்கு உதவிய விவகாரத்தில் ஐதேகட்சித் தலைமைக்கு நெருக்கடி ஏற்படாமல் காப்பாற்றுவற்காகவே அவரை இராஜினாமாச் செய்யும்படி கட்சி வட்டாரங்கள் வற்புறுத்தின என்றும் -

அதையடுத்து வேறு வழியின்றி அவர் தமது பதவியை இராஜினாமாச் செய்தார் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பில் கருணாவின் செல்வாக்கும், அதிகாரமும் கொடிகட்டிப் பறந்த சமயத்தில், அவருடனும், அவருக்குக் கட்டுப்பட்டுச் செயற்படக் கூடிய (16ஆம் பக்கம் பார்க்க)

## பொல்காவலையில் மூவர் பலி!

குருநாகல், ஜூன்24

மஞ்சள் கோட்டில் வீதியைக் கடக்க முயன்ற இரு பாடசாலை மாணவிகளும் மற்றொரு பெண்ணும் தனியார் பஸ் ஒன்றுடன் மோதுண்டு அந்த இடத்திலேயே உயிரிழந்தார்கள்.

இந்தப் பரிதாபச் சம்பவம் குருநாகல் - பொல்காவெல நெடுஞ்சாலையில் ரத்னாகொட பாடசாலைக்கு அருகில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்றது.

விபத்தில் இறந்த மாணவி ஒருவரின் சிறிய தாயாரே உயிரிழந்த மூன்றாவது பெண்ணாவார் . அவருக்கு வயது 36.

மரணமடைந்த மாணவிகள் குருநாகல் மாலிய தேவ பெண்கள் பாடசாலையிலும், திருக்குடும்பக் கன்னியர் மட பாடசாலையிலும் முறையே தரம் 5, (16ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவுக்கு அலி ஸாஹிர் உதவினாரா?

# ஐ.தே.கட்சித் தலைமைக்கு எதுவுமே தெரியாதாம்!

கொழும்பு,ஜூன்24

"மட்டக்களப்பில் இருந்து கருணா குழுவினர் ஏப்ரல் 11 ஆம் திகதி தப்பியோடிய சமயம் ஐ.தே.கட்சி தேசியப்பட்டியல் எம்.பியான அலி சாஹிர மௌலானாவே அவரை கொழும்புக்குக் கூட்டி வந்தார் என ஊடகங்களில அண்மையில் வெளியான செய்திகள தொடர்பாக ஐ.தே. கட்சியின் தலைமைக்கு எதுவுமே தெரியாது." - எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பு ஒன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏப்ரல் 11 ஆம் திகதி மட்டக்களப்பில் இருந்து கருணாவும் அவரது சகாக்களும் தப்பிச்செல்ல ஐ.தே.தேச (16ஆம் பக்கம் பார்க்க)

# எதிரணிக் கூட்டை உடைக்க அரசு பகீரதப் பிரயத்தனம்!

கொழும்பு,ஜூன்24

அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட கூட்டு ஒன்றை எதிர்கட்சிகள் சேர்ந்து உருவாக்கியுள்ள நிலையில், அந்தக் கூட்டை உடைக்கும் பகீரதப் பிரயத்தனத்தில் அரச தரப்பு இறங்கியிருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல்கள் கசிந்திருக்கின்றன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைத் தமது பக்கம் வீழ்த்தும் முயற்சியாக அரசுத்தரப்பு மீண்டும் வலை வீச்சை ஆரம்பித்திருப்பதாகத் தெரிகின்றது. அதேசமயம் தமிழ்க் கட்சிக (16ஆம் பக்கம் பார்க்க)

# கண்ணிகள் புதைப்பதற்கு எதிராக கோப்பாயில் நேற்று இரு பேரணிகள்!

மிதிவெடி அபாயக் கல்வி வாரத்தை ஒட்டி மிதிவெடிகள் மற்றும கண்ணிகளைப் புதைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கண்டனப் பேரணிகள் நேற்று முற்பகல் கோப்பாய்ப் பிரதேசத்தில் நடத்தப்பட்டன.

பொதுமக்களும், பாடசாலை மாணவர்களும் ஒன்றிணைந்து இந்தப் பேரணிகளை நடத்தினர்.

நீர்வேலி கந்தசுவாமி கோயில் முன்றலில் இருந்தும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி முன்பாக இருந்தும் பேரணிகள் புறப்பட்டன.

கண்ணிகளுக்கு எதிரான சுலோகங்களைச் சுமந்தவாறு நூற்றுக்கணக்கான மாணவர்களும் பொதுமக்களும் பேரணியில் கோஷம் எழுப்பியவாறு சென்றனர்.

இரண்டு பேரணிகளும் முற்பகல் 11.00 மணியளவில் கோப்பாய் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தன.

அங்கு வைத்து ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. ஜனாதிபதிக்கான மகஜரை மிதிவெடி அகற்றும் பிரிவின் தொண்டர் கு.சிவரஞ்சனி, உதவிப் பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன் [illegible]சலிதேவியிடம் கையளித்தார். அரச அதிபர், மிதிவெடி அகற்றும் செயற்பாட்டுப் பிரிவுத் தலைவர் ஆகியோருக்கும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

நேற்றைய பேரணிகளில் ஒலித்த கோஷங்கள் வருமாறு:-

★ இனி ஒருபோதும் மிதிவெடியைப புதைக்காதீர்கள்!

★ எமது நிலங்களில் நாம் சுதந்திரமாக நடமாட புதைத்த மிதிவெடிகளை மேலும் விரைவாக அகற்றுக!

★ மிதிவெடியை இறக்குமதி செய்யாதீர்!

★ எமது மண்ணில் இனி ஒருபோதும் மிதிவெடி புதைக்கமாட்டோம என உறுதி செய்திடுவீர்!

★ ஒட்டோவா உடன்படிக்கையில் கைச்சாத்திடுங்கள்!

★ மிதிவெடிகளை அகற்றி இயல்பு வாழ்க்கை வாழ வழிவிடுங்கள்!

★ இளம் சமுதாயத்தை ஊனமாக் (16ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.கட்சி எம்.பி ரவி கருணாநாயக்கவை காரணம் கூறாது கைதுசெய்ய பொலீஸ் முயற்சி

## சட்டத்தரணிகள் எதிர்ப்பால் கைவிட்டுத் திரும்பினர்

ஐதேகட்சியின் முன்னாள் அமைச்சரும், தற்போதைய எம்.பியுமான ரவி கருணாநாயக்கவை காரணம் ஏதும் கூறாமல் கைதுசெய்ய முயன்ற பொலஸாரின் குழு ஒன்றுக்கும், அவரது சட்டத்தரணிகளுக்கும் இடையில் நேற்றுக் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. அதையடுத்து வேறு வழியின்றி ரவி கருணாநாயக்கவைக் கைது செய்ய முடியாது பொலீஸ் குழு திரும்பிச்சென்றது.

நேற்று மாலை ரவி கருணாநாயக்கவின் கொழும்பு இல்லத்தில் இச் சம்பவம் இடம்பெற்றது.

உதவி பொலீஸ் அத்தியட்சகர் சீ.சு. பெத்தசிங்க தலைமையிலான பொலீஸ குழுவே ரவி கருணாநாயக்க வீட்டுக்குச் சென்றது. விசாரணைக்காக அவரைத் தங்களுடன் வருமாறு பொலீஸ அதிகாரிகள் அழைத்தனர், ஆனால் (16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பல்கலைக்கழக நிர்வாகத்தினர் - ஊழியர் நேற்றுச் சந்தித்து இணக்கப் பேச்சு

## பிணக்குகளைத் தவிர்க்க துணைவேந்தர் தலைமையில் குழு அமைக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஜூன்24

யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் மேற்கொண்டுவரும் வேலைநிறுத்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்குடன் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில் சுமுகமான தீர்மானங்கள் எட்டப்பட்டிருக்கின்றன.

பதிவாளரின் பிரயாணக் கொடுப்பனவு விவகாரம் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆள்சேர்ப்பு, இடர் காலக்கடன் ஆகிய விடயங்கள் உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணபதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

யாழ். பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர் தலைவர் ஆகியோரினால் நேற்றைய கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இக்கலந்துரையாடலில் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பிரதிநிதிகள், சர்வதேச மாணவர் பேரவைப் பிரதிநிதி, துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நீண்டநேரம் நீடித்த கலந்துரையாடலின் முடிவில் மாணவர்களின் நலன் கருதி பின்வரும் தீர்மானங்கள் இணக்கப்பாட்டுடன் எடுக்கப்பட்டன.

★ பல்கலைக்கழகப் பதிவாளரின் பிரயாணக் கொடுப்பனவில் ஒழுங்கீனங்கள் இடம்பெற்றிருப்பது ஒப்புக் கொள்ளப்பட்டது. இது தொடர்பாக முறைப்பாடுகளை ஆராய்ந்து - உண்மைத்தன்மைக்கு ஏற்ப - ஏனைய ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்படுவது போன்று பாரபட்சமற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக துணைவேந்தர் உறுதிபடத் தெரிவித்தார். இது தொடர்பான முடிவு சனிக்கிழமை வெளியிடப்படும் என்றும் தெரிவித்தார்.

★ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோரை எமது பிரதேசத்திற்குப் பொருந்தக்கூடியதாக நலன்புரி கூட்டுறவுச் சங்கங்களினூடாகப் பெற்றுக்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. இந்நடைமுறை கிழக்குப் பல்கலைக்கழக முறைமைக்கு ஒத்ததாக அமைந்திருக்கும். ஏற்கனவே, தொழிலை ஆரம்பித்த ஊழியரின் சேவையினையும் கூடிய பட்சம் இரண்டு மாதங்களிற்குள் முடிவுக்குக் கொண்டுவருவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

★ நிலுவையிலுள்ள ஊழியர்படிக் கொடுப்பனவுகளை உடனடியாக வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

★ ஏற்கனவே நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் தொடர்பாக பல்வேறுமுறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இம்முறைப்பாடுகளை ஆராய்ந்து உண்மைத்தன்மையினை அறிந்து குற்றங்காணப்படின் அவரது நியமனம் நடைபெறாதெனவும், இது பற்றி பல்கலைக்கழகப் பேரவைக்கு பிரேரணை ஒன்றை சமர்ப்பிப்பதாகவும் உறுதி வழங்கப்பட்டிருந்தது.

★ ஏற்கனவே தண்டப்பணம் அறவிடப்பட்ட ஊழியர்களின் குற்றம் தொடர்பாக பூரணமான முடிவுக்கு வராதவிடத்து அவர்களிடம் இருந்து பெறப்பட்ட தண்டப் பணத்தை மீளளிப்பதாகவும் உறுதி வழங்கப்பட்டது.

★ இடர் கடன் தொடர்பாக முறையற்ற அணுகுமுறைகள் இடம்பெற்றதை ஒப்புக்கொண்டு எதிர்காலத்தில் இவை இடம்பெறாமல் தடுப்பதற்கு பல்வேறு பல்கலைக்கழக அமைப்புக்களையும், பிரதிநிதித்துவப்படுத்தக்கூடியவகையில் குழு அமைப்பதெனவும் - இக்குழு பாரபட்சமற்ற வகையில் விதிகளை வகுத்து நடைமுறைப்படுத்தும் எனவும் - தெரிவிக்கப்பட்டது. இக்குழு 25.06.2004 இலிருந்து செயற்பட ஆரம்பிக்கும்.

★ இடைநிறுத்தப்பட்ட அனைத்து ஊழியர்களும் வழமைபோல வேலைக்குச் சமுகமளிப்பர் என உறுதியளிக்கப்பட்டது. இவர்கள் எந்த வகையிலும் பழிவாங்கப்படமாட்டார்கள் எனவும் உறுதியளிக்கப்பட்டது.

நேற்றைய கலந்துரையாடலின் முடிவில் துணைவேந்தா, பல்கலைக்கழகத்தினுடைய திறனான சுமுகமான செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்க வந்த சகல பல்கலைக்கழக சமூகம் சார்ந்தவர்களையும் பாராட்டினார். அத்துடன், எதிர்காலத்தில் பிணக்குகள் ஏற்படாத வகையில் பாதுகாப்பதற்காக முன்னுரிமை நடவடிக்கையாக சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இறுதியில் பல்கலைக்கழக மாணவ தலைவர் செ.செல்வக்குமார் அவர்கள் மாணவர்களினதும் சமூகத்தினதும் நன்மைகருதி பல்கலைக் கழக துணைவேந்தரும், ஊழியர் சங்கமும் புரிந்துணர்வுடன் விட்டுக் கொடுத்து ஒரு சுமுகமான உறவினை ஏற்படுத்திக் கொண்டதைப் பாராட்டினார். மாணவர் சமூகம் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

எதிர்காலத்தில் எத்தகைய பிணக்கும் தோன்றாமல் இருப்பதற்காக துணைவேந்தரின் தலைமையில் மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர் சங்கப் பிரதிநிதிகள், சர்வதேச மாணவர் பேரவை இணைப்பாளர் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றை உருவாக்க இணக்கம் காணப்பட்டது.

இதேவேளை -

நேற்றைய கலந்துரையாடல் தொடர்பாக பல்கலைக்கழக ஊழியர் சங்கம் செய்திக்குறிப்பு ஒன்றை விடுத்தது.

நேற்றைய கலந்துரையாடலில் தமக்கு வழங்கப்பட்ட சில வாக்குறுதிகள் தொடர்பாக இன்று காலை 9.00 மணிக்கு ஊழியர் சங்கப் பொதுச் சபை கூடி ஆராயும் என்றும் -

அத்துடன் அனைத்துப் பல்கலைக் கழக தொழிற்சங்க சம்மேளனத் தலைவருடன் இன்றிரவு தொடர்பு கொண்டு அவரது ஆலோசனையும் பெறப்படும் எனவும் -

அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

## சமய சந்நிதிகளில்

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருவிழாவில், தேர் உற்சவம் இன்று காலை 9 மணிக்கும், நாளை வெள்ளிக்கிழமை காலை தீர்த்த உற்சவமும் நடைபெறும். (எ-72)

★ ★ ★

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய மஞ்சத்திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் வசந்த மண்டபப் பூசையை அடுத்து அலங்கரிக்கப்பட்ட மஞ்சத்தில் அம்பாள் வீதி உலா வருவார். (10-5)

★ ★ ★

கல்வயல், பெருங்குளம் ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 தொடக்கம் 10 மணிவரையான சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 7 மணிதொடக்கம் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (10-31)

★ ★ ★

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி கோயில் சகஸ்ர சங்காபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும்.

அன்றையதினம் அதிகாலை 4.30 மணிக்கு சங்குப் பூசையும், காலை 7 மணிக்கு சங்காபிஷேகமும், காலை 9 மணிக்கு சண்முக அர்ச்சனையும் இடம்பெறும். (எ-173)

★ ★ ★

கரவெட்டி தச்சன் தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் முதலாம் திகதி தேர்த திருவிழாவும் மறுநாள் வெள்ளிக் கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (10-173-ரி)

# இ.தொ.கா. அலுவலகம் மீது நாவலப்பிட்டியில் தாக்குதல்

## பிரதி அமைச்சர் மீது குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூன்24

நாவலப்பிட்டியில் இ.தொ.கா. அலுவலகத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. இந்தத் தாக்குதலை எதிர்க்கட்சிகள் கூட்டாகக் கண்டித்துள்ளன.

காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்ட பிரதி அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்கப் பொலீஸார் தவறிவிட்டனர் எனத் தெரிவித்து 20 ஆயிரம் தொழிலாளர்கள் நேற்று அடையாள வேலை நிறுத்தம் ஒன்றில் ஈடுபட்டனர். இதனால், நாவலப்பிட்டி, தொளஸ்பாகே ஆகிய பிரதேங்களில் உள்ள 45 தோட்டங்கள் முற்றாக செயலிழந்து காணப்பட்டன.

நேற்றுமுன்தினம் நாவலப்பிட்டி நகரில் உள்ள இ.தொ.கா. அலுவலகத்திற்குப் பிரதியமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தலைமையில் சென்றதாகக் கூறப்படும் குண்டர் கோஷ்டி ஒன்று அலுவலகத்தைத் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளது. அந்த அலுவலகத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த மூன்று ஊழியர்களும் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இத்துடன் நின்றுவிடாமல் மாகாண சபைத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிடும் இ.தொ.கா. வேட்பாளர் இராமநாதனுக்கும் இந்தக் கொலை அச்சுறுத்தல் விடுத்திருக்கின்றனர்.

பொறுப்பான ஒரு பிரதி அமைச்சர் இப்படி அடாவடித்தனம் செய்வதைக் கண்டிப்பதாக இ.தொ.கா. தெரிவித்துள்ளது. பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடமும், பொலீஸ் மா அதிபரிடமும் முறைப்பாடு செய்துள்ளோம்.

அதேவேளை, நாவலப்பிட்டி பொலீஸ் நிலையத்திலும் நேரடியாக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனினும், பிரதி அமைச்சரையோ, வன்முறையில் ஈடுபட்ட வேறு எந்த ஒரு தரப்பினரையோ பொலீஸார் கைதுசெய்யவில்லை.

பொலீஸாரின் இந்த பாரபட்சமான செயலைக் கண்டித்தே நாவலப்பிட்டி, தொளஸ்பாகே பிரதேசத்திலுள்ள தோட்டத் தொழிலாளர்கள் கட்சி வேறுபாடின்றி நேற்று ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்துள்ளனர்.

அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினால் எமது போராட்டம் நாடளாவிய ரீதியில் தொடரும் என்று இ.தொ.கா. பிரதித் தலைவர் எம்.எஸ். செல்லச்சாமி எம்.பி. தெரிவித்தார். (க)

## யாழ்.இந்து பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்24

யாழ். இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.45 மணியளவில் குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஐக்கிய இராஜ்ஜிய லிஸ்ரர் மருத்துவமனையின் ஆலோசகர் வைத்திய கலாநிதி எஸ்.ஜோதிலிங்கம் கலந்துகொள்கிறார். திருமதி இராஜேஸ்வரி ஜோதிலிங்கம் பரிசில்களை வழங்குவார். (ஐ-3)

## மாவைக் கந்தன் பெருவிழாக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்24

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழா தொடர்பான கூட்டம் நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு வலி. வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் கலாநிதி க.குணராஜா தலைமையில நடைபெறவுள்ளது. (எ)

# அம்பாறையில் 6 சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

நிந்தவூர்,ஜூன்24

அம்பாறை மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்துகொள்ள வந்த ஆறு சிறுவர்களை விடுதலைப்புலிகள் நேற்றுப் பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த திருக்கோவில், விநாயகபுரம், கோமாரி போன்ற கிராமங்களைச் சேர்ந்த 18 வயதுக்குக் குறைந்த - இந்தச் சிறுவர்கள் ஆறு பேரையும், விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், யுனிசெவ் பிரதிநிதிகள் முன்னிலையில் நேற்றுப் பெற்றோரிடம் ஒப்படைத்தார்.

திருக்கோயிலிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பணிமனையில் இச்சிறுவர்களைப் பெற்றோரிடம் ஒப்படைக்கும் நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு ,- அம்பாறை மாவட்ட யுனிசெவ் வதிவிடப் பிரதிநிதி அன்ரியா ஜேம்ஸ் முன்னிலையில் இச்சிறுவர்களின் ஒப்படைப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றுகையில த.குயிலின்பன் கூறியதாவது:-

"எமது தலைமைப்பீடத்தின் கட்டளைக்கேற்ப சிறுவர்களை எமது இயக்கத்தில் சேர்த்துக்கொள்வதில்லை என்பதில் நாம் மிகக் கண்டிப்புடன் செயற்பட்டு வருகின்றோம்.

ஆனால், சில சிங்கள, ஆங்கில ஊடகங்கள் நாம் சிறுவர்களை இயக்கத்தில் சேர்த்துக்கொள்கின்றோம் என இன்றும் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டுவருகின்றன.

ஆனால், சிறுவர்கள் தொடர்பான எமது தலைமைப் பீடத்தின் கட்டளையை 100 வீதம் செயற்படுத்தி வருகின்றோம் என்பதற்கு எடுத்துக்காட்டாக இன்று இச்சிறுவர்களை நாம் பெற்றோரிடம் ஒப்படைக்கின்றோம்.

இதேவேளை, எம்முடன் இணையும் சிறுவர்கள் தொடர்பாக அக்கறை காட்டும் சிறுவர் நலன் காப்பு அமைப்புகள், அதிகாரிகள் கிராமங்கள் தோறும் தாய், தந்தையரை இழந்து பசியாலும், பட்டினியாலும் வாடி வதங்கித் துயருறும் சிறுவர்களின் நலன்கருதி அக்கறை காட்ட முன்வரவேண்டும் - என்கிறார். (க)

# நிதித்துறையின் திடீர்ச் சோதனையில் காலாவதியான பொருள்கள் சிக்கின

## வலி.மேற்கு, காரைநகர் பகுதிகளில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூன்24

தமிழீழ நிதித்துறையின் விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் நேற்று வலிகாமம் மேற்கு மற்றும் காரைநகர்ப் பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களில் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையில் பாவனைக்கு உதவாத பொருள்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டன.

ஆனைக்கோட்டை, நவாலி, வட்டுக்கோட்டை, காரைநகர், சங்கானை போன்ற பகுதிகளிலேயே இத்திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. அப்பகுதிகளில் இருந்த 9 கடைகளில் இருந்து பாவனைக்குதவாத பொருள்கள் கைப்பற்றப்பட்டு குறிப்பிட்ட கடை உரிமையாளர்களாலேயே அழிக்கப்பட்டன. (எ-9)

# விபத்தில் இருவர் காயம்!

கரவெட்டி,ஜூன்24

மோட்டார்சைக்கிளை உருட்டிச் சென்றவர் மீது வேகமாக வந்த மற்றொரு மோட்டார்சைக்கிள் மோதியதில் இருவர் காயமடைந்தனர்.

புலோலி - கந்தமுருகேசனார் சிலைக்கு அண்மையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அல்வாய் வடக்கு முத்துமாரி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த எம்.தனீஸ்வரன் (வயது23), பருத்தித்துறையைச் சேர்ந்த ரி.ஜெயராசா (வயது45) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த இருவரும் பருத்தித்துறை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (10-70)





கண்ணிவெடி விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு நேற்று கோப்பாயில் பேரணி ஒன்று நடைபெற்றது. இந்தப் பேரணியில் கலந்துகொண்ட மாணவர்களையும், பேரணியின் முடிவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுககான மகஜர் ஒன்றை மிதிவெடி விழிப்புக்குழுவின் தொண்டர் செல்வி கு.சிவரஞ்சினி கோபபாய் உதவிப் பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன அஞ்சலிதேவியிடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: வலி.கிழக்குச் செய்தியாளர்)

# உதயன்

## சிறுபான்மையினரின் ஐக்கியம் உடைய அனுமதிக்கலாமா?

இலங்கை அரசியல் நிலைவரம் தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், கடந்த திங்களன்று கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் முக்கிய சில கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார்; யதார்த்தபூர்வமான சில உண்மைகளை அம்பலப்படுத்தியிருக்கின்றார்.

*"அரசின் கெடுபிடிப்போக்கும் குறுக்குப்பாதைப் பயணமும் நாட்டுமக்களை ஒரு யுத்த பீதிக்கே கொண்டு சென்றுள்ளன. வாழ்க்கைச்செலவு உயர்வினால் திக்குமுக்காடிக் கொண்டிருக்கும் நாட்டுமக்களை, மீண்டும் ஒரு யுத்தம் வெடித்துவிடுமோ என்று அச்சுறுத்தும் வகையில் அரசு செயற்படுகின்றது.*

*"சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதாக அரசு பம்மாத்துக் காட்டுகின்றது. பெரும்பான்மை இல்லாத இந்த அரசால் ஒருபோதும் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியாது.*

*"இப்படியான ஒரு நிலையில் கருணாவை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி புலிகளைப் பலவீனப்படுத்த அரசு முனைகிறது. அரச ஊடகங்களையும் அதற்குப் பயன்படுத்துகிறது. அரசின் இந்த சுத்துமாத்துப் பலிக்காது"* - இப்படிக் கூறியிருக்கும் ரவூப் ஹக்கீம் இன்னொரு விடயத்தையும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

*"முஸ்லிம் சமூகத்தை சில துரோகக் கும்பல்களைப் பயன்படுத்திச் சிதைக்க முயற்சிப்பது போல, புலிகள் இயக்கத்தையும் - தமிழர் ஐக்கியத்தையும் - சிதைக்க முயல்கின்றது அரசு. கருணாவை ஒரு கருவியாகப் பயன்படுத்தித் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பலவீனமடையச் செய்யும் அரசின் முயற்சி பலன்தராது. அத்தகைய முயற்சியைக் கண்டிக்கிறோம்"* - என்றும் ஹக்கீம் தெரிவித்திருக்கின்றார்.

சிறுபான்மை இன மக்களை அடக்கியாளும் - அடிமைப்படுத்தும் - பேரினவாத அரசுகள், அதை லாகவமாகச் செய்வதற்குக் கையாளும் தந்திரம்தான் - சூழ்ச்சிதான் - இந்தப் பிரித்தாளும் சதி.

முதலில் சிறுபான்மை இனங்களுக்கிடையில் பிரிவினையைக் கொண்டுவர முயன்றார்கள். தமிழ்பேசும் மக்களாகிய தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரித்தாளும் சூழ்ச்சி செய்தார்கள். அந்தச் சூழ்ச்சியின் தாற்பரியத்தைப் புரியாமல் சிறுபான்மை இனங்களின் தலைவர்கள் சிலர் அதற்குக் கருவியானார்கள். அந்த முயற்சியில் பேரினவாதம் கணிசமான வெற்றியீட்டியது.

முஸ்லிம் தலைவர்கள் பலர் இன்னும் அதனைப் புரிந்துகொள்ளாமல் - உணர்ந்துகொள்ளாமல் - இருப்பது வேதனையிலும் வேதனை.

சிறுபான்மை இனங்களுக்கு இடையில் குரோதத்தை உருவாக்கி, எண்ணெய் ஊற்றி, எரியவிட்டு, வளர்ப்பதன் மூலம் அவற்றை நிரந்தரப் பகைகொள்ள வைக்கவும் அதன் மூலம் சிறுபான்மை இனங்களின் ஐக்கிய பலத்தை உடைக்கவும் கங்கணம்கட்டிச் செயற்பட்டது பேரினவாதம். கடந்த ஆண்டுகளில் கிழக்கில் பல முஸ்லிம், தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவங்களையும் அதையொட்டி எழுந்த பகைமை, பதற்றம், கலவரங்கள் போன்றவற்றையும் இந்தப் பின்னணியில் நோக்குபவர்கள் அத்தகைய சம்பவங்களின் சூத்திரதாரிகள் யார், அவர்களின் நோக்கம் என்ன என்பவற்றை இலகுவாகப் புரிந்துகொள்வர்.

அந்த சூத்திரதாரிகளின் நோக்கம் நிறைவேறியதும் அத்தகைய செயல்கள் இப்போது அடங்கிவிட்டன.

இப்போது அடுத்த கட்டம், சிறுபான்மை இனங்களுக்கு இடையில் பிளவையும், பிரிவையும் ஏற்படுத்துவதில் கணிசமான வெற்றிகண்ட இப்பேரினவாத சக்திகள், இப்போது சிறுபான்மை இனம் ஒவ்வொன்றுக்குள்ளும் பிளவையும், பிரிவையும், குரோதத்தையும் உருவாக்கி, அவற்றின் ஐக்கியத்தையும் உடைக்கும் தமது கைங்கரியத்தை ஆரம்பித்துவிட்டன.

முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கு எதிராக இந்த நாட்டின் அரசினாலும் அதன் தலைமைத்துவத்தினாலும் மிகமிகக் கேவலமான முறையில் கட்டவிழ்த்துவிடப்பட்ட பிரசாரமும் அதன் நடவடிக்கை உத்தியும் அவற்றில் ஒரு பகுதியே.

அதேபோன்று, ஐக்கியப்பட்டு நிற்கும் தமிழர் தரப்புக்குள் கருணா என்ற தனிமனிதப் பிறழ்வைப் பயன்படுத்தி தமது எண்ணத்தை நிறைவேற்ற இச்சக்திகள் முயன்றன.

ஆனால், முஸ்லிம் சமூகம் போன்றில்லாமல் ஐக்கியப்பட்டு வலுவான நிலையில் நிற்கும் தமிழினம் இதுவிடயத்தில் சரியான பதிலடியைப் பேரினவாதத்துக்குக் கொடுத்ததால் இப்போது நிமிரமுடியாது நிற்கின்றது அது.

அதைத்தான் *"முஸ்லிம் சமூகத்தைச் சில துரோகக் கும்பல்களை வைத்து சிதைக்க முயற்சிப்பது போன்று புலிகள் இயக்கத்தைச் சிதைத்துவிடமுடியாது"* - என்று சுட்டிக்காட்டியிருக்கிறார் ரவூப் ஹக்கீம்.

சிறுபான்மை இனங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாகத் தமக்குள் ஐக்கியப்பட்டிருப்பது மட்டுமல்லாமல், அவை அனைத்தும் சேர்ந்து ஐக்கியப்பட்டு நின்றால் தமது நியாயமான உரிமைகளை ஒன்றுசேர்ந்து வென்றெடுப்பதற்கு உகந்தநிலையை அது ஏற்படுத்தும் என்பது நிச்சயம். இதனைச் சம்பந்தப்பட்ட தரப்புகள் அனைத்தும் உணர்ந்து செயற்படுவது எப்போது?

# கட்டாக்காலி நாய்களை அழிப்பதில் உள்ளூராட்சிச் சபைகள் மெத்தனம்

## சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் குற்றஞ்சாட்டுகிறார்

யாழ்ப்பாணம்,ஜூன்24

குடாநாட்டில் கட்டாக்காலி நாய்கள் பெருகிவருகின்றன. அவற்றை அழிப்பதற்கு உள்ளூராட்சிச் சபைகள் மேற்கொண்டு வரும் முயற்சிகள் போதுமானவையாக இல்லை.

- இவ்வாறு குற்றஞ்சாட்டியிருக்கிறார் மாகாண சுகாதார சேவைகள் பதில் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் இ.தெய்வேந்திரன்.

யாழ். மாவட்டத்தில் 'விலங்கு விசர்நாய்களால் ஏற்படும் பாரிய பிரச்சினைக்கு உடன் தீர்வுகாணல்' எனும் தலைப்பில் உள்ளூராட்சிச் சபைச் செயலாளர்கள், உள்ளூராட்சி உதவியாளர்கள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்கான முக்கிய கூட்டம் நேற்று மா.சு. சேவைகள் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு பேசும்போதே டாக்டர் இ.தெய்வேந்திரன் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வருடம் நாடளாவிய ரீதியில் ஒரு லட்சத்து 36 ஆயிரம் கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்பட்டன. யாழ். மாவட்டத்தில் 2 ஆயிரத்து 301 நாய்கள் அழிக்கப்பட்டன.

இன்றும் ஏராளமான நாய்கள் அழிக்கப்படாமல் உள்ளன. இவற்றை அழிப்பதற்கு உள்ளூராட்சிச் சபை நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கட்டாக்காலி நாய்களை அந்தந்தப் பகுதிச் சுகாதாரத் தொழிலாளர்களைக் கொண்டு அழிக்க முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இன்று வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாகத் திகழ்வது கட்டாக்காலி நாய்கள் ஆகும். வீட்டில் வளர்க்கும் நாய்கள் றோட்டிற்கு வந்தால் அதனை அழித்துவிடவேண்டும்.

விசர்நாய்க்கடிக்கு இலக்காவோர் அதற்கான தடுப்பூசியை உரிய காலத்தில் போட்டுக்கொள்ளவேண்டும்.

இன்று வலிகாமம் பிரதேசத்தில் விசர்நாய்க் கடியால் இறந்தவர்கள் தொகை அதிகரித்துக் கொண்டு செல்கிறது.

இதனை உள்ளூராட்சி சபை அதிகாரிகள் கவனத்தில் கொண்டு சுகாதாரப் பகுதியினருடன் தொடர்பு ஏற்படுத்தினால் பாரிய இப்பிரச்சினைக்கு இவ்வருட இறுதிக்குள் தீர்வுகாணலாம்.

இன்று நாயினால் மட்டும் நோய் பரவுகின்றது என்பது அல்ல. பூனை, ஆடு, மாடு மற்றும் விலங்குகளாலும் விலங்கு விசர்நோய் அதிகரித்து வருகிறது என்று தெரிவித்தார் டாக்டர் தெய்வேந்திரன்.

இறுதியில் விலங்கு விசர்நோய் வந்த மிருகங்களினதும் மனிதர்களினதும் விவரணப் படம் காண்பிக்கப்பட்டது.

(4-ரி-185)

# கடன்களை எடுத்துக்கொண்டு 'டிமிக்கி' கொடுக்கும் எம்.பிக்கள்

கொழும்பு,ஜூன்24

நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள இலங்கை வங்கிக் கிளையில் இருந்து கடந்த தேர்தலுக்கு முன்னர் மேலதிகக் கடன்வசதி மூலம் கடன்களைப் பெற்றுக்கொண்டுள்ள 40 நாடாளுமன்ற உறுப்பினர்களுள் 7 பேரே அக்கடன் தொகைகளைத் திருப்பிச் செலுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரச மற்றும் எதிரணியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இவ்வாறு கடன் தொகைகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வாறு கடன் தொகைகளைப் பெற்றுள்ள 40 நாடாளுமன்ற உறுப்பினர்களுள் 35 பேர் இதுவரை அதனைத் திருப்பிச்செலுத்தவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் சுமார் 20 பேர் வரையில் கடந்த பொதுத் தேர்தலில் தோல்வியைத் தழுவியுள்ளனர். அவர்களிடமிருந்து இக்கடன் தொகைகளைப் பெறுவதில் மேற்படி வங்கி பல சிரமங்களை எதிர்நோக்கி வருகிறது என்றும் கூறப்பட்டது.

இதுதொடர்பாக இவர்களுக்கு வங்கி மூலம் பல அறிவுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டும் எந்தப் பலனும் கிட்டவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய அமைச்சர்கள் சிலரும் இவ்வாறு கடன்பெற்று மீளச்செலுத்தாதோர் பட்டியலில் இடம்பெற்றிருக்கின்றனர் எனவும் கூறப்படுகின்றது. (-4)

# மட்டு.கொலைகள் தொடர்பாக அடையாள அணிவகுப்பு

**எவரும் அடையாளம் காட்டப்படவில்லை**

மட்டக்களப்பு,ஜூன்24

மட்டக்களப்பில் அண்மைக்காலத்தில் நடைபெற்ற கொள்ளை மற்றும் கொலை முயற்சி சம்பவங்கள் தொடர்பில் அடையாள அணிவகுப்பு ஒன்று நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் இடம்பெற்றது. எனினும், சந்தேக நபர்கள் எவரும் அடையாளம் காட்டப்படவில்லை.

பொலீஸார் சமர்ப்பித்த விசேட அறிக்கையின் பிரகாரம் நடைபெற்ற இந்த அணிவகுப்பில், ஆயுதங்களுடன் வேறு வேறாகப் பிடிபட்ட மூன்று பேர் சந்தேக நபர்களாக ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

அணிவகுப்பின்போது எவரும் அடையாளம் காட்டப்படவில்லை.

அண்மையில் ஐ.தே.க. வேட்பாளர் எஸ்.சுந்தரம்பிள்ளை, தமிழரசுக்கட்சி வேட்பாளர் இராஜன் சத்தியமூர்த்தி, சிரேஷ்ட விரிவுரையாளர் தம்பையா, பத்திரிகையாளர் ஐ.நடேசன் உட்பட ஏழு பேர் மட்டக்களப்புப் பகுதியில் படுகொலை செய்யப்பட்டனர் என்பதும் -

மட்டக்களப்பு மாவட்டத்தின் அரச அதிபர் ஆர்.மோனகுருசாமி கொலை முயற்சிக்கு உட்பட்டிருந்தார் என்பதும் - குறிப்பிடத்தக்கவையாகும். (க)

# பிரிட்டிஷ் கவுன்ஸில் ஏற்பாட்டில் ஆங்கில ஆசிரியருக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜூன்24

யாழ். மாவட்டத்திலுள்ள ஆங்கில ஆசிரியர்களின் கற்பித்தல் ஆற்றலை மேம்படுத்துவதற்குரிய பயிற்சிகள் வழங்குவதற்குப் பிரிட்டிஷ் கவுன்ஸில் முன்வந்துள்ளது.

இந்தப் பயிற்சித் திட்டத்தை யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாகப் பிரிட்டிஷ் கவுன்ஸிலின் பிரதிநிதிகளான அமி.கமல்யன், மரியம சமாலியர் ஆகியோர் நேற்று ஆராய்ந்தனர். 'யூ.எஸ்.எயட்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள இப்பயிற்சிநெறி அடுத்தமாதம் முதல் ஆரம்பமாகவுள்ளது.

இதில் முதற்கட்டமாக 20 ஆங்கில ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சியளிக்கப்படவுள்ளனர். அதன்பின்னர் 240 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இதன் மூலம் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 20ஆயிரத்து 800 மாணவர்கள் பயன் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.(4-5)

**நாளை**

ஆனி 11
வெள்ளிக்கிழமை
(25.06.2004)
திதி: ஸப்தமி
பகல் 8.42 வரை.
நட்சத்திரம் : உத்தரம்
இரவு 7.44 வரை
ஆனி உத்தரம்
சுபநேரம்:5.55 - 7.25
ராகுகாலம்:10.25 - 11.55
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

சொந்த வீடு என்பது ஒவ்வொருவரினதும் வாழ்க்கையின் இலட்சியம்.

**கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு**

# வலி. கிழக்கு மாணவர்களுக்கு வினாடி வினாப் போட்டிகள்

வலி. கிழக்கு,ஜூன்24

கரும்புலிகள் நினைவு நாளையொட்டி வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான வினாடி வினாப் போட்டிகள் வலிகாமம் கிழக்கு மாணவர் அமைப்பினால் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளில் பொது அறிவு, தமிழீழப் போராட்ட வரலாறு, கல்வி தொடர்பான வினாக்களே சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன எனவும் -

இப்போட்டி எதிர்வரும் 3ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் காலை 9 மணிக்கு இடம்பெறும் எனவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் 6 மாணவர்கள் வீதம் தெரிவுசெய்யப்பட்டுப் போட்டிகள் நடைபெறும்.

வெற்றிபெறும் முதல் 3 பாடசாலைகளுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (-4-180)

# புனர்வாழ்வுத் திட்டம் குறித்து செயலகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்24

சமுதாய மட்டத்தில் விசேட தேவையுள்ளவர்களுக்கான புனர்வாழ்வு வேலைத்திட்டம் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் இடம்பெறும் இக்கலந்துரையாடலில் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம், வெண்புறா அமைப்பு, உலக சுகாதார நிறுவனம், யுனிசெவ் நிறுவனம், அகதிகளுக்கான ஐ.நா. தூதரக யாழ். அலுவலகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பிரதேச செயலகங்களின் சமூக அபிவிருத்தி அலுவலர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் 18 வயதிற்குக் குறைந்த வலுவிழந்தவர்களுக்கான புனர்வாழ்வுத்திட்டம் தொடர்பான விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்படவுள்ளதால் சகல தொண்டர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கேட்டுள்ளார். (-4-5-ரி)

# தொலைக்காட்சி நடிகை நீதிமன்றிலும் 'நாடகம்'

கொழும்பு,ஜூன்24

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட தொலைக்காட்சி நடிகையொருவர் நீதிமன்றத்திலும் ஒரு காட்சியை நிகழ்த்தி நீதிவானின் கண்டனத்துக்குள்ளானார்.

நிரோஷா சமுத்திராகுமாரி என்ற தொலைக்காட்சி நடிகை அபாயகரமான ஓர் இரசாயனப் பொருளைத் தன்வசம் வைத்திருந்தார் என்பதாகக் குற்றஞ்சாட்டி தெஹிவளைப் பொலீஸாரால் மவுண்ட் லெவினியா நீதிவான் முகம்மது மக்கி முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

விசாரணையின்போது நடிகையின் தந்தை சாட்சியமளிக்கையில், தனது மகள் மதுசாரங்களைப் பாவிப்பதில் அதிக நாட்டம் கொண்டுவிட்டார் என்றும் அவரை பாதுாப்பில் வைத்து சிகிச்சையளிக்கும்படியும் நீதிவானிடம் கேட்டுக்கொண்டார்.

இந்த நிலையில் நடிகை அழுதுகுளறியபடி, தன்னை பிணையில் எடுக்க ஒரு பெரிய சட்டத்தரணியை ஏற்பாடு செய்யும்படி தனது தந்தையிடம் கண்ணீர்விட்டு மன்றாடினார்.

நீதவான் அவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டு அவருக்குச் சிகிச்சையளிக்க ஏற்பாடுசெய்யும்படி பொலீஸாரைக் கேட்டுக்கொண்டார். அபாயகரமான மருந்துகள் சட்டத்தின்கீழ் இந் நடிகை கைதுசெய்யப்பட்டிருந்தார். இம்மாதிரி மருந்துகளைத் தனியார் வைத்திருப்பதற்கு சுகாதார திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றிருக்கவேண்டும். (ப)

# அமரர் வித்தி. ஞாபகார்த்த அறக்கட்டளை

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் வித்தியானந்தன் ஞாபகார்த்தமாக அறக்கட்டளை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் காப்பாளர்களாக பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராயர் அதிவண. கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி அறக்கட்டளை அவரது குடும்ப உறுப்பினரின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (10-185)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### தவறிவீட்டது

பாரதி வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலைச் சேர்ந்த பொன்னம்பலம் சிவராஜா என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 572831922V) சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P.: No. 0777 280282 சன்மானம் வழங்கப் படும். (33392)

கல்வியங்காட்டைச் சேர்ந்த அன் ரனி குமார் என்பவருடைய தே.அ. அட்டை (803065144V), வி.அ.அட்டை என்பன தவறிவிட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் 0777 111851, 077 6544023 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (33391)

### விற்பனைக்கு

இல.678/11, கண்டி வீதி (முள்ளி ஒழுங்கை), அரியாலையில் 1½ பரப புக் காணிடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீடு (கிணற்றுடன்) விற்ப னைக்குண்டு. தொடர்பு:த.சுந்தரலிங் கம், இல.150, நெடுங்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். T.P.:2222894. (33414)

2½பரப்புக் காணி (கிணற்றுப் பங்குடன்) கோண்டாவில் மேற்கில் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.:4590959. (33413)

இல.17, சுவாமியார் வீதியில் சென ஜோசப் பாடசாலை கத்தோலிக்க மிஷ னுக்கு அருகில் வீட்டுடன் கூடிய 2¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: இராஜேஸ்வரி, இல.16, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (33417)

நல்லஇன பொமனேரியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: குமாரசாமி, 196, நாவலர் வீதி, யாழ்ப பாணம். (33401)

பிறீமா இன சிவப்பு வெள்ளைப் பேடுக்குஞ்சுகளும், பகிராஇன புறொ யிலர் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட் டைச் சந்தி.T.P.No.:3529,2867, P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (33305)

உடுவில் தெற்கு, மானிப்பாயில் (புதுமடம்) அமைந்துள்ள 5 அறைகள் மற்றும் குசினி, 2 குளியலறைகள் முதலான சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:T.P.:021 4590906, 0776553086. (33367)

27/17, புங்கங்குளம் வீதி, கொழும புத்துறை, யாழ்ப்பாணத்தில் அழகிய மேல்மாடியுடன் (மொட்டை மாடியுடன் சமுர்த்தி வங்கிக்கு முன் ஒழுங்கை யில்) நல்ல சூழலில் வாகனத் தரிப் பிட வசதியுடன் 3 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777 305533, 0777 570279. (35650)

கொழும்பு-05, ஹவ்லொக் வீதி யில் திம்பிரிக்கசாய சந்திக்கு அரு கில் மக்கள் வங்கிக்கு அருகிலும் செலான்,சம்பத் வங்கிகளுக்கு எதிர்ப் புறமாகவும் கீழே கடையுடன் கூடிய மேல்மாடிக் கட்டடம் உடன் விற்ப னைக்கு. (No:81, Havelock Road, Colombo-05) தொடர்புகளுக்கு: 0777 368162. (சி-35727)

சாவகச்சேரி, டச்சு வீதி, மருத டிச் சந்தியில் வீடு கட்டுவதற்கு உகந்த தென்னை வளம் உள்ள 2½ பரப்புக காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு.சி.கமலநாதன், கந்தசுவாமி கோயில் வீதி, சங்கத்தானை. T.P.: 0777 676593. (33418)

### தேவை

புத்தக நிலையம் ஒன்றுக்கு 20 வயது முதல் 30 வயதுக்குட்பட்ட பெண் விற்பனையாளர் தேவை.
தொடர்பு: க.ரவிக்குமார், 326, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(33420) (24-17-19)

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

இல. 7, சிவப்பிரகாசம் வீதி, ஐய னார் கோயிலடியில் 3½ பரப்புக் காணியில் மூன்று அறை, மண்டபத் துடன் அமைந்துள்ள வீடு விற்ப னைக்குண்டு.

தொடர்பு:
கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை
இல.43, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.222 5102
(யாழ் இந்துக் கல்லூரி மைதானத்துக்கு அண்மையில்)

## சிறுவர் இல்லத்திற்கு ஆள்கள் தேவை

மானிப்பாயிலுள்ள ஏலிம் சிறுவர் இல்லத்துக்கு கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு ஆள்கள் தேவைப்படுகின்றனர்.

- பராமரிப்பாளர் (ஆண்)
  (ஆண் பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு) - வயது 35 - 50
- பராமரிப்பாளர் (பெண்)
  (பெண் பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு) - வயது 40 - 50
- சமையற்காரர் (ஆண்) - வயது 35 - 50
- தோட்டக்காரர் (ஆண்) - வயது 35 - 50

விண்ணப்பிப்போர் தங்களது சுயவிவரங்களை விளக்கமாகக் குறிப்பிட்டு நற்சான்றுப் பத்திரங்களையும் இணைத்து எதிர்வரும் 26.06.2004 அம் திக திக்கு முன்னர் நேரிலோ தபால் மூலமோ விண்ணப்பங்களை அனுப்பலாம்.

**தொடர்பு: நிர்வாகி, ஏலிம் சிறுவர் இல்லம் மெமோறியல் ஒழுங்கை, மானிப்பாய்.**
(33387) (12-19-17)

## சிறந்த சாரதியாக வரவிரும்புகின்றீர்களா?

உடனே விஜயம் செய்யுங்கள்

**வரதன் லேனேர்ஸ்**

**VARATHAN LEARNERS**

Driving Licence learning School "A"Grade. Reg.No-D.S.365
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
T.P:.0777 110868, 0712 373294
கிளை: 136, பிரதான வீதி (தபால் நிலையம் அருகில்).
சுழிபுரம் T.P.: 0777 110868, 077 6403254

ஒருவருடமாக யாழ். வன்னி மாவட்டங்களில் சிறந்த சாரதிகளை உருவாக் கியவர்கள் நாங்களே என்பதை அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

மேலதிக விவரங்கள் 22.06.2004 உதயன் பத்திரிகையில் வெளியாகியுள்ளன. (33346)(43-19-17-24)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 01 – 04 – 1917



உதிர்வு 25 – 05 – 2004

### திருமதி பொன்னையா நாகரத்தினம்

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

*இன்று (24-06-2004) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

"தாயகம்",
இளந்தாரிகோயிலடி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.
T.P.: 0777-498451. (33419)(42-19-17-24)

நீங்காத நினைவுகளுடன்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## தீவுப்பகுதி தனியார் போக்குவரத்துச் சேவைச் சங்கம் புங்குடுதீவு

## அறிவித்தல்

**இன்று (24.06.2004) வியாழக்கிழமை தொடக்கம் புதிய பதிவுகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரும் வரை நிறுத்தம்**

மேற்படி எமது சங்கத்தில் மறு அறிவித்தல் வரும்வரை (776) சேவை யில் ஈடுபட புதிய சிற்றூர்திகள் எவைக்கும் அனுமதி வழங்கப்படமாட் டாது. பழைய மற்றும் புதிய பதிவுகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரும்வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால், ஏற்படும் அசௌகரியங் களுக்கு மனம் வருந்துகின்றோம். இது தொடர்பாக அனைவரையும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தலைவர்,
தீவுப்பகுதி தனியார் போக்குவரத்து
சேவைச்சங்கம்,
புங்குடுதீவு. (33402)(42-19-17-24)

## யாழ். மண்ணில் மாபெரும் கண்டிய நடனம்

இலங்கையின் தேசிய நடனமான கண்டிய நடனம் யாழ். மண்ணில் உலகப்புகழ்வாய்ந்த கண்டிய நடனக் கலைஞர்களால் ஒவ்வொரு நடனத்திற்குமான தனித் தனி விளக்கங்கள் தமிழில் விளக்கப்படுத்தி நடை பெறவுள்ளது. இக்கண்டிய நடன நிகழ்ச்சியின் நடன அம்சங்களாக,

*01) மங்கள வாத்தியத்துடன் நடனம்*
*02) பூஜா நடனம்*
*03) மயில் நடனம்*
*04) உடக்கி என்று அழைக்கப்படும் சாஸ்திரிய நடனம்*
*05) முகமூடி நடனம்*
*06) யக்கம் என்று அழைக்கப்படும் நகைச்சுவை நாட்டிய நாடகம்*
*07) கஜகாவன்ன நடனம்*
*08) ரபான் நடனம்*
*09) கோலாட்டம்*
*10) தமிழ் நடனப் பாடலுக்கு அபிநயம்*
*11) பந்தேரு நடனம்*
*12) பெண்கள் தீயுடன் ஆடும் நடனம்*
*13) கிராமத்து நடனம்*
*14) செம்பு நடனம்*

இந்த நடனங்களுடன் இன்னும் பல கண்டிய நடனங்களும் நடைபெறவுள்ளன.

இடம்: **யாழ்.வீரசிங்கம் மண்டபம்**
காலம்: **2004-06-27ஞாயிற்றுக்கிழமை**
நேரம்: **பி.ப. 1.00 மணி**

*அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.*
*அனுமதிக்கு முந்துங்கள்:*

**T.K. ரூறிஸ்ற் இன்**

இல. 200, அரசடி வீதி,
பலாலி வீதி அருகில், கந்தர்மடம் சந்தி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 222 5680/0776209963
(சி-35735) (26-19-18)

# STUDY IN INDIA


**SSM College of Engineering affiliated to ANNA UNIVERSITY** (Channai)



**A/L 2004 STUDENTS**
Arrangements have been made for enrolment with pending results

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.E. Information Technology | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Computer Science and Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Electronics and Communication Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Mechanical Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Information Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Computer Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Apparel and Fashion Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| M.S.C. Information Technology | 5 Year | Pass in All Subjects in any discipline |

**Garden City College affiliated to UNIVERSITY of BANGALORE**




| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.Sc. (Computer Science) | 3 Year | Maths, Physics & Statistics |
| B.Sc. (Fashion & Apparel Design) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Sc. (Microbiology) | 3 Year | Chemistry and Biology |
| B.Sc. (Genetics) | 3 Year | Chemistry, Physics, Biology, Zoology, Botany |
| B.Sc. (Biotechnology) | 3 Year | Chemistry, Physics, Biology |
| BCA. (Bachelor of Computer Applicants) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BBM. (Bachelor of Business Management) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BHM. (Bachelor of Hotel Management) | 4 Year | Pass in All Subjects in any discipline |
| B.A. (Journalism) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Com (Computers) | 3 Year | Pass in All Subjects in any discipline |

*Partial SCHOLARSHIPS for students with average of 75 marks in A/L exam*

யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு
Mr. K.Jegaeswaran (B.Sc, Dip. in Edu.)
(Chemistry Teacher - J/Vembady Girls High School)
ANDRA, உப்புமடச்சந்தி. K.K.S Road, கோண்டாவில்
Telephone :- 021-4590268 or 9

*Already many Sri Lankan Students are studying in these Colleges - REFERENCE AVAILABLE*



வியட்நாமைச் சேர்ந்த ரான் வான் கே (வயது 67) என்பவர் தான் எப்படியாவது ஒரு உலக சாதனையைப் படைத்து விட வேண்டுமென்று விரும்பினார். இதற்காக அவர் கடந்த 31 வருடங்களாகத் தனது தலை முடியை வெட்டவில்லை. அவரை இந்தப் படத்தில் காண்கிறீர்கள்.

இப்போது அவரது தலைமுடியின் நீளம் 6.2 மீற்றர்கள் (20 அடி) ஆயினும் தனது பெயரை கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் உள்ளடக்குமாறு அவர் கோரிக்கை விடுக்கவில்லையாம். 1997 ஆம் ஆண்டில் 5.15 மீற்றர் நீளமான தலைமுடியைக் கொண்டிருந்த தாய்லாந்தைச் சேர்ந்த கூ சாற்றோ என்பவரே கின்னஸ் சாதனையாளராக உள்ளார்.

# அதிபர் புஷ் மீதான நம்பிக்கையை இழந்து வருகின்றனர் அமெ.மக்கள்

நியூயோர்க்,ஜூன்24

தீவிரவாத்திற்கு எதிராகத் திறமையாக போரிடக் கூடியவர் அதிபர் புஷ் என்ற நம்பிக்கையை அமெரிக்க மக்கள் இழந்து விட்டனர். அதிபர் தேர்தலை எதிர்நோக்கியுள்ள நிலையில் மக்களிடையே அவருக்கு செல்வாக்கு சரிந்து வருகிறது என சமீபத்தில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கா போர் தொடுத்த போது அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷின் முடிவுக்கு அந்நாட்டு மக்கள் பலத்த எதிர்ப்புத் தெரிவித்தனர். போருக்குப்பின்னர் குறிப்பாக சதாம் கைது செய்யப்பட்ட பின்னர் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில், புஷ்ஷின் செல்வாக்கு அந்நாட்டு மக்களிடையே அதிகரித்திருந்தது.

இந்நிலையில், அதிபர் தேர்தலை எதிர்நோக்கும் புஷ்ஷின் செல்வாக்கு எப்படி உள்ளது என்பது தொடர்பாக கடந்த இரு நாள்களுக்கு முன்பு 'ஏபிசி நியூஸ்' மற்றும் வாஷிங்டன் போஸ்ட் செய்தி நிறுவனங்கள் கருத்துக்கணிப்பு ஒன்றை மேற்கொண்டனர். இதில் தீவிரவாதத்திற்கு எதிராக திறமையாக போரிடக் கூடியவர் புஷ் என்ற நம்பிக்கையை அந்நாட்டு மக்கள் இழந்திருப்பது தெரியவந்துளளது.

'ஈராக்போர் பயனளிக்கக் கூடியது அல்ல' என்று கருத்துக்கணிப்பில் பங்கேற்ற பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதில் அதிபர் தேர்தலிலும் பிரதிபலித்து அதிபர் புஷ்ஷுக்கு சிக்கலை ஏற்படுத்தும் என்பது தெரியவந்துள்ளது.

ஈராக்போரை புஷ் கையாளும் முறைக்கு 50 சதவீதமானோர் மட்டுமே ஆதரவு தெரிவித்துள்ளனர். இதுவும் கடந்த மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்புடன் ஒப்பிடுகையில் 8 வீதம் குறைவாகும்.

போருக்குப்பின் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்புடன் ஒப்பிடுகையில் 29 சதவீதம் குறைவு.



ஒரு காலத்தில் வலுவாக இருந்த துறையில் புஷ் தற்போது வலுவிழந்துள்ளார். ஏ.பி.சி. இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அமெரிக்காவை பாதுகாப்பான நாடாக மாற்றியதில் அதிபர் புஷ் அவரை எதிர்த்துப் போட்டியிடும் ஜோன் கெரியை விட முன்னணியில் உள்ளார் இந்த விஷயத்தில் புஷ்மீது அமெரிக்க மக்கள் அதிக நம்பிக்கை கொண்டுள்ளனர். (ஒ)

## பெனாசிர் பதவி ரத்து

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான பெனாசிர் பூட்டோ இப்போது வெளிநாட்டில் தங்கியிருக்கிறார்.

இப்போது பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு அவர் தலைவராக இல்லை என்று பாகிஸ்தான் தேர்தல் ஆணையகம் அறிவித்து இருக்கிறது. (ஒ)

# பிரிட்டிஷ் கடற்படையினரை ஈரான் நேற்று விடுவித்தது

ஈரானுக்கும் - ஈராக்கிற்கும் இடையே உள்ள கடல் வழியில் வைத்துத் தாம் கைப்பற்றிய பிரிட்டிஷ் கடற்படைப்படகுகள் மூன்றையும் ஈரானிய அதிலிருந்த பிரிட்டிஷ் வீரர்கள் 8 பேரையும் விடுவிப்பதாக ஈரானிய அதிகாரிகள் நேற்று அறிவித்தனர்.

இது தொடர்பாக பிரிட்டிஷ் இராஜதந்திரிகள் ஈரானிய அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

பிரிட்டிஷ் கடற்படைப்படகுகள் 'சட் அல் அரப்' என்ற நீரிணைக்குள் சட்ட விரோதமாக நுழைந்ததால் தான் அதனைக் கைப்பற்றியதாக ஈரான் அரசு தெரிவித்திருந்தது.

இதேவேளை, பிரிட்டிஷ் கடற்படையினர் பயிற்சியின் நிமிர்த்தம் பஸ்ரா துறைமுகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோதே அவர்களை ஈரானிய அதிகாரிகள் கைது செய்தனர் என பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருந்தது.

(ப-ஒ-8)

# தென்கொரிய பணயக்கைதி கொலை!

கெய்ரோ,ஜூன்24

தென் கொரியாவைச் சேர்ந்த 33 வயது கிம்சன் இல் என்ற வர்த்தகரை அல்கெய்டா தீவிரவாத இயக்கத்தை சேர்ந்த தீவிரவாதிகள் கடத்திச்சென்று பணயக் கைதியாக வைத்து இருந்தனர்.

ஈராக் மண்ணில் இருந்து தென் கொரிய இராணுவம் வெளியேற வேண்டும். ஈராக் நாட்டுக்கு மேலும் இராணுவத்தை அனுப்பக்கூடாது. இதை ஏற்காவிட்டால் பணயக் கைதியின் தலையை துண்டித்து ஈராக் நாட்டுக்கு அனுப்பிவைப்போம் என்று அவர்கள் எச்சரிக்கை விடுத்து இருந்தனர்.

கிம்சன் இல் சிறைபிடிக்கப்பட்டு ஒரு வாரத்திற்கு பிறகு தீவிரவாதிகள நேற்றுமுன்தினம் அவரது தலையைத துண்டித்து படுகொலை செய்துவிட்டனர். அல்-அஜீரா தொலைக்காட்சியில் இது தொடர்பான காட்சிகள் ஒளி பரப்பாகின.

# நடிகர் விஜயகாந்தின் ரசிகர்களுடன் டாக்டர் ராமதாஸின் தொண்டர் மோதல்

கடலூர்,ஜூன்24

தமிழகத்தில் கடலூரில் நடிகர் விஜயகாந் மன்றத்திற்கு நேற்றுமுன்தினம் அதிகாலை தீ வைக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பா.ம.க நிறுவனத் தலைவர் ராமதாஸின் உருவப்பொம்மையை எரிக்க முயன்றனர் என்று விஜயகாந் ரசிகர் மன்றத்தினர் 41 பேர் கைது செய்யப்பட்டனர்.

கள்ளக் குறிச்சியில் அண்மையில் நடைபெற்ற விழா ஒன்றில் நடிகர் விஜயகாந் அரசியல் தலைவர்களை விமர்சித்துப்பேசினார். 'மக்களைச் சந்திக்காமல் அமைச்சர்கள் ஆகிறார்கள்' என்ற குற்றச்சாட்டை வெளியிட்டார் அவர். டாக்டர் ராமதாஸின் மகனைக் குறிப்பிட்டு நடிகர் விஜயாகாந் இவ்வாறு பேசியதாகக் கருதும், பாட்டாளி மக்கள் கட்சியினர் நடிகர் விஜயகாந்தின் பேச்சுக்கு எதிர்ப்புக் குரல் எழுப்பினர். இதனால் மாநிலம் முழுவதும் நடிகர்விஜயகாந்த் ரசிகர்களுக்



கும், பா.ம.க.வினருக்கும் இடையே மோதல் வலுத்து வருகிறது.

டாக்டர் ராமதாஸின் மகனான டாக்டர் அன்புமணி அரசியலில் எவ்விதத்திலும் சம்பந்தப்படாதவர். பா.ம.க.வில் அடிப்படை உறுப்பினராகக் கூட அவர் இருக்கவில்லை. அவர் நாடாளுமன்ற உறுப்பினராகாமலேயே தற்போது மத்திய அமைச்சராக ஆகிவிட்டார். அவரையே 'மக்களைச்சந்திக்காது அமைச்சர்கள் ஆகிறார்கள்' என்று குறிப்பிட்டார். என பா.ம.கவினர் ஆத்திரமடைந்துள்ளனர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நடிகர் ரஜினிகாந்துடன் மோதிய டாக்டர் ராமதாஸும், பா.ம.க.வினரும் தற்போது நடிகர் விஜகாந்துடன் மோதுகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# சேது சமுத்திரத் திட்டத்தை துரிதப்படுத்த நடவடிக்கை

சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்துக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக தூத்துக்குடி துறைமுக சபை கேள்விப்பத்திரங்களைக் கோரியுள்ளது.

சேது சமுத்திரத் திட்டப் பணிகளை நிறைவேற்றும் பணிகளை மேற்கொள்ள தூத்துக்குடி துறைமுக சபையை மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை நியமித்துள்ளது.

140 ஆண்டு காலமாகப் பேசப்பட்டு வரும் இத்திட்டம் தற்போது முக்கியத்துவம் பெற்றுள்ளது. சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து ஆராய்ந்த தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆய்வு நிறுவனம் தனது ஆய்வறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

அதன் அடிப்படையில் தமிழக அரசு, மாசுக் கட்டுப்பாட்டு சபை மத்திய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகம் ஆகியவற்றில் அனுமதி கோரி தூத்துக்குடி துறைமுக சபை விண்ணப்பித்துள்ளது.

அதன் தொடர்ச்சியாக, விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான கேள்விப்பத்திரம் கோரியுள்ளது.

# கலாமுக்கு தபாலில் துப்பாக்கி

புதுடில்லி,ஜூன்.24

இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமுக்கு நாட்டுத் துப்பாக்கி தோட்டா மற்றும் வெடி பொருள் ஆகியவை தபால்ப் பொதி மூலம் நேற்றுமுன்தினம் அனுப்பப்பட்டிருந்தது.

அந்தப் பொதியைப் பாதுகாப்பு அலுவலர்கள் சோதனையிட்டபோது அதில் நாட்டுத் துப்பாக்கி, தோட்டா, வெடிபொருள் ஆகியவை இருந்தமை தெரியவந்தது.

இந்தப் பொதியை அனுப்பிய மகேஷ் சாவ் என்பவரை சில மணி நேரங்களில் பாட்னாவில் பொலீஸார் கைது செய்தனர். (ஒ)

# இந்தியாவின் செலவு மிகுந்த மூன்றாவது நகரம் சென்னை

இந்தியாவில் செலவு மிகுந்த நகரங்களின் பட்டியலில் மும்பை முதலிடத்தில் உள்ளது. இரண்டாவது இடத்தில் டில்லியும் மூன்றாவது இடத்தில் சென்னையும் உள்ளன.

உலக அளவில் வாழ்க்கைச் செலவு மிகுந்த நகரங்களின் பட்டியலை 'மெர்சர் ஹியுமன் ரிசோர்ஸ் கன்சல்ட்டிங்' என்ற நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதன்டி, ஜப்பான் தலைநகர் டோக்கியோ உலகிலேயே செலவு மிகுந்த நகரமாக உள்ளது. லண்டன் இரண்டாவது இடத்திலும் அடுத்தடுத்த இடங்களில் மொஸ்கோ, ஒஸாகா ஹொங்கொங் நகரங்களும் இடம்பெற்றுள்ளன.

செலவு குறைந்த நகரங்களின் பட்டியலில் பராகுவே நகரமான அசின்சியான் முதலிடத்தில் உள்ளது.

அமெரிக்காவைப் பொருத்த வரை அதிகம் செலவு பிடிக்கும் நகரங்களில் நியூயோர்க் முதலிடத்தில் உள்ளது. பிட்ஸ்பர்க் கடைசி இடத்தில் உள்ளது.

இந்தியாவில் மும்பை நகரம்தான அதிக செலவாகும் நகரமாகும். இரண்டாவது இடம் டில்லிக்கும், மூன்றாவது இடம் சென்னைக்கும் கிடைத்துள்ளது. நான்காவது இடத்தில் பெங்களூரும் உள்ளது.

குடியிருக்க வீடு, உணவு, உடை, வீட்டுப் பொருள்கள், போக்குவரத்து, பொழுதுபோக்கு போன்றவற்றுக்கு ஆகும் செலவு போன்றவற்றின் அடிப்படையில் நகரங்களின் வரிசைப் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.(ஒ)



தமிழகத்தில் அரச ஊழியர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தம் தொடங்கியபோது, மாநிலம் முழுவதும் தற்காலிக அடிப்படையில் சுமார் 15 ஆயிரம் பேர் பணி நியமனம் செய்யப்பட்டனர். இந் நிலையில் கடந்த திங்கட்கிழமை திடீரென தற்காலிகப் பணியாளர்களை பணி நீக்கம் செய்ய அரசு உத்தரவிட்டது. தமிழகத்தில் பணிநீக்கம் செய்யப்பட்ட தற்காலிக அரசு ஊழியர்கள் அனைவரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் சோகத்துடன் திரண்டனர். அவர்களில் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செவ்வாய்க்கிழமை காலையில் கண்ணீர்விட்டு அழும் பெண்களைப் படத்தில் காணலாம். ஆயினும், தமிழக முதல்வர் ஜெயலலிதா இவர்கள் அனைவரையும் மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்வதாக நேற்று மாலை அறிவித்தார்.


## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

இறைச்சிக்காகவும், 'சூப்' செய்வதற்காக செட்டைகளுக்காகவும் 100 மில்லியன் எண்ணிக்கையான சுறாக்கள் ஒவ்வோர் ஆண்டும் வேட்டையாடப்படுகின்றன. செட்டைகள் வெட்டியெடுத்த பின்னர் சுறாக்களை உயிருடன் கடலில் வீசிவிட அவை நீந்த முடியாமல் அமிழ்ந்தும் இரத்தப் பெருக்கினாலும் பலியாகிவருகின்றன.

உ

வல்வெட்டி வேவில்

## அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விக்கினேஸ்வரர் தே ம்

புனராவர்த்தன அஷ்ட பந்தன ஸப்தத்ச குண்டபஷ

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

மெய்யடியார்களே!

ஸ்வஸ்தி நிகழும் மங்களகரமான தாரண வருடம் ஆனித் திங்கள் 16 ஆம் நாள் (30.06.2004) புதன்கிழமை அமிர்தசித்தயோகமும், திரயோதசி திதியும் அனுஷ நட்சத்திரமும் கூடிய காலை 9.18 மணி முதல் 9.55 மணிவரையுள்ள சிங்க லக்கின சுபவேளையில் விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

**கிரியாகால விவரம்:**

**கர்மாரம்பம்:** 25.06.2004 வெள்ளிக்கிழமை அதிகாலை 5.57 மணிக்கு

**எண்ணெய்க்காப்பு:** 28.06.2004 திங்கட்கிழமை காலை 7மணிமுதல் இரவு 10மணிவரை

**மஹாகும்பாபிஷேகம்:**
30.06.2004 புதன்கிழமை காலை 9.18 மணிமுதல் 9.55 மணிவரையுள்ள சுபவேளையில்

**கும்பாபிஷேக பிரதம குரு:**
ஆகமக் கிரியாஜோதி துவஜாரோஹண துரந்தரர்
**சிவஸ்ரீ.சதா.மகாலிங்கசிவக் குருக்கள் J.P.**
அதிபர் சைவக்குருமார் பயிற்சிக் கல்லூரி, திருநெல்வேலி

**ஆலய பிரதம குருமார்கள்:**
சிவஸ்ரீ வே.பாலச்சந்திரக்குருக்கள்
சிவஸ்ரீ தி.விக்னேஸ்வரக்குருக்கள் S.D.O.

**கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துபவர்கள்:**
திரு.சு.குமாரசாமி ஐயா, திரு.தி.கமலநாதன் ஐயா (சுவிஸ்)

அன்றைய தினம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் யாழ். சேவையில் கும்பாபிஷேக நிகழ்வு காலை 8.00 மணிமுதல் 10.00 மணிவரை நேரடி அஞ்சல் செய்யப்படும் என்பதனையும் அடியார்களுக்கு மதியம் அன்னதானம் வழங்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

வேவில், வல்வெட்டி. ஆதீனகர்த்தாக்களும்
(33405) (34-14-19) புனருத்தாரண திருப்பணிச் சபையினரும்.


---

LG

## அதிபாதுகாப்பும் உயர்தொழிநுட்பமும் கொண்ட LG இலங்கையில்


உலகப்புகழ் பெற்ற, தரத்தில் சிறந்த, உயர் தொழிநுட்பத்தில் விசேடபாதுகாப்பு கவசங்களை கொண்டு வீட்டுபாவனைக்கும் தொழிற்சாலைகளுக்குமென விஷேடமாக வடிவமைக்கப்பட்ட **LG** வழங்கும் மின் இணைப்பு உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு கவசங்களை இப்போது பெற்றுக்கொள்ளலாம்.

### LG Residential Circuit Breakers



RCCB MCB

### LG Heavy Duty Industrial Circuit Breakers



Conductor & Relay D.O.L. Swithch MCCB

Thom

ஏக விநியோகத்தர்கள்
பிஷோன் கோப்பரேஷன் (தனியார்) நிறுவனம்.
476/2, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 2575104
தொலைநகல்: 4519589. மின்னஞ்சல்: ceylon555@hotmail.com
அவசர அழைப்புக்கு: 0777-285299

---

# Thusha Opticians & Dental Works

## துஷா பல், மூக்குக் கண்ணாடியகம்

544, Hospital Road, Jaffna.
☎ 021 222 3461
0777 150032




சீனமுறையில் சங்குப் பற்களைச் சிறந்தமுறையில் கட்டிட, மிதப்புப் பற்களுக்கு "கிளிப்" செய்து மிக விரைவில் சீர்செய்துகொள்ள மிக நவீன முறையிலான பிறேம்களில் மூக்குக் கண்ணாடி, சண்கிளாஸ் வகைகளை மிக விரைவில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்!

**துஷா பல், மூக்குக் கண்ணாடியகம்**

(சி-35758)(34-14-19)

---

## இரண்டாம் வருட நினைவஞ்சலி



அமரர்

## தம்பிஐயா முருகானந்தன்

**B.Sc.**

(இரசாயனவியல் ஆசிரியர், வெஸ்லிக் கல்லூரி - கொழும்பு)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05.06.1969 | 24.06.2002 |

எளிமையின் சிகரமே!
ஏற்றங்கள் நாம் காண!
ஏணியாய் நின்றவனே!
வேதியலின் ஆசிரியனாய்ப் பல
வேதியல் நூல்களைத் தந்தவனே!
பாதியிலே பிரிந்துவிட்டோம்
வேதனையே!

குடும்பத்தினர்
பழைய பாடசாலை வீதி, கல்வயல், சாவகச்சேரி.

M.30, அரச தொடர்மாடி, காலி வீதி, பம்பலப்பிட்டி. (33386)(42-34-14-19)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26 - 06 - 1926 | 25 - 05 - 2004 |

அமரர்

## கணபதிப்பிள்ளை வேலாயுதம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், கப்பூது, கரவெட்டி)

எமது குடும்பத் தலைவரின் மறைவுச்செய்தி கேட்டு இரங்கல் தெரிவித்து அனுதாபங்காட்டிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (24.06.2004) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மகன்,
உப அஞ்சல் அதிபர். கரணவாய் தெற்கு.

(சி-35756)(34-14-19)

---

## நெஞ்சகலா நினைவஞ்சலி

44ஆம் ஆண்டு 14ஆம் ஆண்டு





| | தோற்றம் | மறைவு |
|---|---|---|
| அமரர் நாகலிங்கம் திருஞானசம்பந்தர் | 22 - 07 - 1913 | 02 - 07 - 1960 |
| திருமதி திருஞானசம்பந்தர் யோகாம்பிகை | 23 - 08 - 1920 | 01 - 07 - 1990 |

**அமரர் நாகலிங்கம் திருஞானசம்பந்தர்**
(முன்னாள் ஆசிரியர், மீசாலை வீரசிங்கம் சைவ வித்தியாசாலை)

**திருமதி திருஞானசம்பந்தர் யோகாம்பிகை**
(இளைப்பாறிய ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்)

திதி: 24-06-2004

உங்களை நினைவு கூருகின்றோம். - குடும்பத்தினர்.

மீசாலை.
(33397)(42-34-14-19)

# கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

வடமராட்சி,ஜூலை24

கரும்புலிகள் தினம் எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி தமிழர்தாயகத்தில் இம்முறை மாவட்ட மட்டத்தில் மிக்க எழுச்சியுடன் உணர்வு பூர்வமாக பல்வேறு நிகழ்வுகளுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனையொட்டி மாவட்ட மட்டத்திலும் தாயக மட்டத்திலும் விளையாட்டுப்போட்டிகள், சிறுகவிதைப் போட்டிகள் என்பவற்றுடன் வறிய மாணவருக்கு உதவுதல் போன்ற பல்வேறு நிகழ்வுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சில இடங்களில் கரும்புலிகள் நினைவாக நடத்தப்படும் விளை யாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. முதற் கரும்புலி கப்டன் மில்லர் வீரமரணத்தை தழுவிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பிரதான நிகழ்வு இடம்பெறும்.

இதனைத் தவிர போக்குவரத்து வசதிக்குறைவு காரணமாக தீவுப் பகுதி மக்களின் வசதி கருதி தீவுப் பகுதியிலும் கரும்புலி நினைவு தின நிகழ்வை விசேடமாக நடத்த ஏற்பாடாகியுள்ளது.

கப்டன் மில்லரின் நினைவுச் சிலை அமைந்துள்ள நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மில்லர் சதுக்கம் பொதுமக்களினால் தற்போது சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகிறது.

அவரின் சிலைக்கு அருகில் இருந்த உடைந்த, சேதமடைந்த கட்டடங்கள் கனரக வாகனங்கள் மூலம உடைத்து அதன் எச்சங்கள் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன.

நெல்லியடியில் இடம்பெறும் கரும்புலிகள் தின நிகழ்வின் போது இதுவரைகரும்புலியானவர்களின் உருவப்படங்கள் கொண்ட விசேட பந்தல் ஒன்று அமைக்கப்படும் என நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (4-173)



யாழ்.போதனா வைத்தியசாலை சிறுவர்பூங்கா திறப்புவிழா நிகழ்வில் வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.சதுர்முகன் மங்கள விளக்கேற்றி வைப்பதையும், அருகில் குழந்தைகள் வைத்திய நிபுணர் டாக்டர் ஏ.ஜே.மோறல், கணக்காளர் மு.விஜயரகுநாதன், வைத்தியசாலைச் செயலாளர் இ.பத்மநாதன், குழந்தைகள் விடுதி சிரேஷ்ட வதிவிட வைத்தியர் டாக்டர் கே.குருபரன் ஆகியோர் நிற்பதையும் காணலாம். (10-15)

### கரும்புலிகள் தினத்தையொட்டி

# மாணவர் பேரவை ஏற்பாட்டில் சிறுகதை, கவிதை போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன்24

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் கரும்புலிகள் தினத்தையொட்டி கவிதை, சிறுகதை போட்டிகளை நடத்தவுள்ளனர்.

இப்போட்டியில் தேச விடுதலை உணர்வினை மையமாகக் கொண்டு ஆக்கங்கள் வரையப்படவேண்டும்.

இதில் சிறுகதைப் போட்டியில் எவரும் பங்குபற்றலாம். கவிதைப் போட்டியில் மாணவர்கள் மட்டுமே பங்குபற்றமுடியும். இவர்கள் தமது பாடசாலை அதிபரின் சிபாரிசுடன் ஆக்கங்களை அனுப்பவேண்டும்.

ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் அடுத்தமாதம் முதலாம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ தபால மூலமாகவோ சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறுபவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் கரும்புலிகள் தினத்தன்று வழங்கப்படும். (4-13)

# நெதர்லாந்து அரசின் உதவியுடன் விவசாயிகளுக்குப் பயிற்சிகள்

வலி.தெற்கு,ஜூன்24

நெதர்லாந்து அரசின் உதவியுடன் பழ உற்பத்தி தொடர்பான பிரயோக பயிற்சிகள் யாழ்ப்பாண மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

வாரத்தில் இரண்டு அணிகளாக 2500 விவசாயிகளுக்கு பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது எதிர்வரும நவம்பர் மாதம்வரை இப் பயிற்சிகள் தொடர்ச்சியாக இடம்பெற உள்ளன.

ஒவ்வோர் அணியிலும் 40 பயிற்சியாளர்கள் கலந்துகொள்ளும் இப் பயிற்சி மூன்று நாள் வதிவிடப் பயிற்சிகளாக நடத்தப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கமநலசேவை நிலையங்களுடாக பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

பழ உற்பத்தியில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் இப்பயிற்சி வகுப்பின் போது ஆராயப்பட்டு, பழ உற்பத்தியின் முக்கியத்துவம், தாவரங்கள் தெரிவு என்பன குறித்து விளககங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

பழ மரங்கள் பாதுகாப்பு, பராமரிப்பு, கத்தரித்தல், பீடைத்தாக்கம், அறுவடை, அறுவடையின் பின் உள்ள தொழில்நுட்பம், முதிர்மரங்களை இளமைப்படுத்துதல், பழப்பாகன முறை போன்ற பல்வேறு துறைகளில் பிரயோகப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ் வதிவிடப் பயிற்சிகளில் கலந்துகொள்பவர்களுக்கன தங்குமிட வசதிகள், உணவுகள், போக்குவரத்து வசதிகள் என்பன இலவசமாக வழங்கப்படுகின்றன. (4-152)

### பிரசவ விடுதி திருத்தப்பட்டது

குருநகர், ஜூன்24

கொடிகாமம் அரசினர் வைத்தியசாலையின் பிரசவ விடுதி யுனிசெப் உதவியின் கீழ் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

இப்பிரசவ விடுதியை இயங்கச் செய்வதற்கு குடும்பநல உதவியாளர் நியமிக்கப்பட வேண்டியுள் ளது.

பிரசவ விடுதிக்கான தளபாட வசதிகளையும் வழங்கி இப்பிரசவ விடுதியை இயக்க நடவடிக்கை எடுக்குமாறு கொடிகாமம் மத்திய மருந்தக மகப்பேற்றுப் பணிமனையின் பொறுப்பு வைத்திய அதிகாரி யாழ்.சுகாதாரத் திணைக்களத்தை கோரியுள்ளார். (4-51)

# தென்மராட்சி கிழக்கு கரம்பகத்தில் விரைவில் மீளக் குடியமர அனுமதி?

தென்மராட்சி,ஜூன்23

தென்மராட்சி கிழக்கு அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள கரம்பகம் கிராம அலுவலர் பிரிவில் மக்கள் மீளக்குடியமர விரைவில் அனுமதி வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பகுதியில் அமைந்திருந்த படை முகாம்கள், பாதுகாப்பு காவலரண்கள் என்பன அங்கிருந்து அகற்றப்பட்டு, படையினர் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று தெரியவருகின்றது.

கடந்த வாரம் கரம்பகம், எழுதுமட்டுவாள் தெற்கு ஆகிய பிரிவுகளின் கிராம அலுவலர்கள் படையினரால் அங்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்குள்ள நிலைமையை அவர்கள் பார்வையிட்டனர்.

இப்பகுதிகளில் உள்ள பெருமளவு குடியிருப்புகள் சேதமடைந்துள்ளன. பயன்தரு மரங்கள் பல வெட்டப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - தென்மராட்சி கிழககில் அதியுயர் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ளதால் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக் குடியமர முடியாத நிலையில் தற்போது வேறு இடங்களில் தங்கியுள்ள குடும்பங்களின் தற்காலிக முகவரியினைத் திரட்டுமாறு படை அதிகாரிகள் கிராம அலுவலர்களிடம் கேட்டிருந்தனர். (ஐ-117)

# போக்குவரத்தைத் தடைசெய்யும் விளம்பரப் பலகைகளை அகற்றுக!

## மாநகர ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன்24

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் போக்குவரத்துக்குத் தடையாகவுள்ள விளம்பரப்பலகைகள் அகற்றப்படவேண்டும் என மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் கேட்டுள்ளார்.

அண்மைக்காலமாக குடாநாட்டில் அதிகரித்துள்ள வீதி விபத்துக்களுக்கு இவ்வாறான விளம்பரப் பலகைகளும் ஒரு காரணமென பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

எனவே கடை உரிமையாளர்கள் தமது தொழில் ஸ்தலங்களுக்கு முனபாக, வீதி ஓரங்களில் உள்ள விளம்பரப்பலகைகளை தாமதமின்றி அகற்ற வேண்டும் என்றும் - இது தொடர்பாக உரிய கவனமெடுக்காத கடை உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (4-13)

### சேவைக்கால செயலமர்வு

தென்மராட்சி, ஜூன்24

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக காலச் செயலமர்வு அடுத்தமாதம் 10 ஆம்திகதி வரணி ஆசிரிய நிலையத்தில் நடைபெறும்.

விஞ்ஞானபாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (4-117)

### மாதகல் தொடக்கம் இளவாலை வரை

# உயிர்ப்பூட்டல் குழுக்கள் ஒன்றிணைந்து செயற்பாடு

மாதகல் ஜூன்24

உயிர்ப்பூட்டல் செயற்பாட்டு குழுவினர் மாதகல் தொடக்கம் இளவாலை வரை உள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள உயிர்ப்பூட்டல் குழுவினரை மாரீசன்கூடல் றோ.க.பாடசாலையில் சந்தித்துள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் பெரியவிளான் விவசாயச் சங்கம், சென். ஜேம்ஸ், சகோதரபகிர்வு, சென்.ஆன்ஸ விவசாயச்சங்கம், சென்யூட் இளையோர் முன்னேற்றக் குழு, விவசாயச்சங்கம், மாரீசன்கூடல் கடற்றொழில் மற்றும் விவசாயச் சங்கம், சகாயபுரம் விவசாயச்சங்கம், மாதகல் மாதர் சங்கம், சுடர்ஒளி ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலின்படி பெரியவிளான், சென்.ஜேம்ஸ், சென். ஆன்ஸ, சென்யூட் ஆகியன ஒரு மக்கள் உயிர்ப்பூட்டல் குழுவாகவும், மாரீசன் கூடல் சகாயபுரம், மாதகல் என்பன ஒரு குழுவாகவும் செயற்பட ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

எதிர்காலங்களில் இந்த உயிர்ப்பூட்டல் குழுவாலேயே மக்களின் சமூக பொருளாதார வளங்களை முன்னேற்றுவிப்பதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

இக் கூட்டத்தில் - இளவாலை உயிர்ப்பூட்டல் குழு ஊக்குவிப்பாளர் ஏ.பி.றொபேட் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஆசிரியர் நா.கருணாகரன் உரையாற்றும்போது, ஏனைய பகுதிகளில் உயிர்ப்பூட்டல் குழு, மக்கள் உயிர்ப்பூட்டல் குழுவாக ஒன்றிணைந்தால் அவர்கள் ஏராளமான நன்மைகளைப் பெறுகின்றார்கள்.

அத்தோடுவீட்டில் உள்ள பெண்கள் கோழி, ஆடு வளர்த்தல் சிறு வீட்டுத்தோட்டங்கள் பன்ன வேலைகள் செய்வதால் குடும்பம் கஸ்டம் இல்லாமல் வாழலாம்.

இன்று ரீ.வி. பார்ப்பதால் இந்த வேலைகளைச் செய்யாமல் போகிறார்கள். ரீ.வி. நிகழ்ச்சிகளை பார்ப்பதை குறைத்தால் மற்ற நிறு வனத்தையோ அல்லது அரசாங்கத்தின் நிவாரணத்தையோ நம்பி வாழ வேணடிய அவசியம் இல்லை. (95)




# துர்நடத்தையில் ஈடுபட்டோர் வகையாக மாட்டிக் கொண்டனர்

வடமராட்சி,ஜூன்24

கலாசாரத்துக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் துர்நடத்தையில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் 3 பெண்களும் 4 ஆண்களும் துன்னாலையில் வைத்து வடமராட்சி கலாசாரம் பேணும் அமைப்பினால் கையும மெய்யுமாகப் பிடிபட்டனர்.

சீரழிவில் ஈடுபட்டவர்களில் 3 பெண்களும் புத்தூரைச் சேர்ந்தவர்கள். 4 ஆண்களும் வடமராட்சிப் பகுதியைச் • சேர்ந்தவர்கள். ஆண்களில் இருவர் குடும்பஸ்தர்கள். ஏனைய இருவரும் இளைஞர்கள் என கலாசாரம் பேணும் அமைப்பின் விசாரணை மூலம் தெரியவந்தது.

பிடிக்கப்பட்ட இந்த 7 பேரும் கலாசாரம் பேணும் அமைப்பினால் கடுமையாக எச்சரிக்கை செய்யப் பட்டு விடுவிக்கப்பட்டனர். (4-133)

### நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

வலி.தெற்கு,ஜூன்24

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் நிறுவுநர்தின விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை வியாழக் கிழமை காலை நடைபெற உள்ளன.

கல்லூரி அதிபர் பொ.சுந்தரலிங்கம் தலைமையில் காலை ஒன்பது மணிக்கு நடைபெற உள்ள இந்நிகழ்வில் நிக்கொட் பணிப்பாளர் ரி.இலங்காநேசன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலன் சிறப்பு விருந்தினராகவும் தெல்லிப்பழை துர்காதுரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். (4-151)

# தங்க நகை உங்களுடையதா?

யாழ்ப்பாணம், ஜூன்24

வீதியில் கண்டெடுக்கப்பட்ட ஒரு சில தங்க நகைகள் யாழ். மாநகர சபையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கடந்த 10 ஆம் திகதி நல்லூர் ஆலயத்துக்கும் முத்திரைச்சந்திக்கு மிடையில் கண்டெடுக்கப்பட்ட இந்த தங்க நகைகளை உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தொடர்பு கொள்பவர்கள் யாழ்-மாநகரசபையின் ஆணையாளர் இ.இராமலிங்கத்திடம் தொடர்புகொளளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(4-13)

# சாவகச்சேரி இந்துவில் ஆசிரியர் தரவட்டம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கணிதம், தமிழ், விஞ்ஞானம், சமூகக்கல்வி, ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான ஆசிரியர் தரவட்டம் பின்வரும் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் கணிதம், தமிழ் ஆகிய பாடங்களுக்கும் எதிர்வரும் 2 ஆம் திகதி விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களும் மூனறாம் திகதி ஆங்கில பாடமும் நடைபெறுமென வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.(4-117)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் கனகசபை சண்முகலிங்கம்

இன்று (24.06.2004) வியாழக்கிழமை காலை 6மணிக்கு தெணி அம்மன் கிருத்திய மண்டபத்தில் நடைபெறுகின்ற அனனாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் நண்பகல் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மண்ணில்: 23-11-1936
விண்ணில்: 25-05-2004

சாரையடி, புலோலி.

- மனைவி,
பிள்ளைகள்.

(33351)(26-34-14)

## இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்
### யாழ்ப்பாணம்
## கட்டடம் வாடகைக்குத் தேவை

அலுவலகம் நடத்துவதற்கும் சிமெந்து களஞ்சியப்படுத்துவதற்கும் வசதியான கட்டடம் ஒன்று யாழ்.நகர மையப் பகுதியில் இருந்து ஒரு கிலோ மீற்றர் சுற்று வட்டாரத்திற்குள் இரண்டுவருட குத்தகை ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்குத் தேவைப்படுகின்றது.

கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. அலுவலகப் பாவிப்பிற்கான பகுதி 1000 சதுர அடிக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
2. சிமெந்து களஞ்சியப்படுத்தும் பகுதி 750 சதுர அடிக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
3. மின்சார வசதி (Electricity) இருத்தல் வேண்டும்.
4. குழாய் நீர் வசதி (Pipe Lining) இருத்தல் வேண்டும்.
5. மலசலகூடம் (Toilet) இரண்டு இருத்தல் வேண்டும்.

மேற்படி வசதிகளுடனான கட்டடம் வழங்க விரும்புவோர் எதிர்பார்க்கும் வாடகை, முற்பணம் நிபந்தனை ஆகிய விவரங்களுடன் 28-06-2004 ஆம திகதி பிற்பகல் 2.00மணிக்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பங்களைப் பின்வரும் விலாசத்திற்கு அல்லது எமது பக்ஸ் இலக்கம் 2448866 இற்கு அனுப்பிவைக்கவும்.

விநியோக உத்தியோகத்தர்,
இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்,
130, W.A.D. ராமநாயக்க மாவத்த,
கொழும்பு - 2.

(C/35766)(42-34-14)

*மொரட்டுவை பல்கலைக்கழக தமிழ் இலக்கியமன்றம் வழங்கும்*

## தொழில்சார் கற்கைநெறி வழிகாட்டல் மற்றும் கணனியியல் கருத்தரங்கு

உயர்தரப் பரீட்சைக்கு அடுத்த படிமுறை நகர்வைப் பற்றிய தெளிவின்மையை மாணவர் மத்தியில் நீக்கும்முகமாக, மொரட்டுவை பல்கலைக்கழக மாணவர்கள் மேற்படி முழுநாள் நிகழ்வை முதற்கட்டமாக யாழ்ப்பாணம், வலிகாமம் பகுதிகளில் நடத்த ஒழுங்குசெய்துள்ளனர்.

இந்நிகழ்வில்:-

★ குழுநிலை தொழில்சார் கற்கைநெறி வழிகாட்டல் (Career Guidence- Group Level)
★ குழுநிலை கணனியியல் கருத்தரங்கு (Group discussion of Computing)
★ ஆற்றல் மேம்படுத்துகை விவாதம் (Skill Development Programme)

என்பன உள்ளடங்கும்.

நடைபெறும் பகுதிகள்:

| யாழ்ப்பாணம் | வலிகாமம் |
|---|---|
| இடம் : யாழ். மத்திய கல்லூரி | இடம் : இராமநாதன் கல்லூரி |
| காலம் : 25.06.2004 வெள்ளிக்கிழமை | காலம் : 26.06.2004 சனிக்கிழமை |
| நேரம் : காலை 8.30 மணி | நேரம் : காலை 8.30 மணி |
| பிரவேசம் : இலவசம் | பிரவேசம் : இலவசம் |

குறிப்பு:-

1. 23.06.2004 முதல் மேற்படி பாடசாலைகளில் பதிவுகளை மேற்கொள்வதன்மூலம் உங்கள் வரவை உறுதிசெய்யவும்.
2. பாடசாலை மாணவ பிரதிநிதிகளுக்கான அழைப்பிதழ்கள் தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

*இளைஞர்களின் எதிர்காலத் திட்டமிடலை இலகுவாக்கும் இந்நிகழ்வில் பங்குபற்றிப் பயன்பெறுமாறு வேண்டுகிறோம்.*

தமிழ் இலக்கிய மன்றம்
மொரட்டுவை பல்கலைக்கழகம்

மொரட்டுவை பல்கலைக்கழக
மாணவர்கள்.

ஊடக அனுசரணை :- உதயன்


(C/35733)

# மிதிவெடி அபாயக்கல்வி வாரம்

## ஜூன் 21 தொடக்கம் ஜூன் 27 வரை

## மிதிவெடியினால் பாதிப்புற்றோர்கள் பற்றிய தகவல்கள்
### (யாழ். மாவட்டம்)

★ யாழ். குடாநாட்டில் மிதிவெடியினால் பாதிக்கப்பட்டோர் 664 பேர்.
★ பாதிக்கப்பட்டோரில் பெரும்பாலானோர் 20 வயதிற்கும் 45 வயதிற்கும் உட்பட்ட ஆணகள்.
★ பாதிக்கப்பட்டோரில் பெரும்பாலானோர் கூலித்தொழிலாளர்கள்.
★ பாதிக்கப்பட்டோர் அதிகமுள்ள பிரதேச செயலர் பிரிவுகள் கோப்பாய், தென்மராட்சி, தெல்லிப்பழை, நல்லூர்.




# District Mine Action Office, Jaffna
## மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்

(சி/35761)(29-14-34)

# சமுர்த்தி அலுவலர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

கொழும்பு,ஜூன்24

அடுத்துவரும் இரண்டு மாத காலத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையில் நிரந்தரமாக்கப்படவுள்ளனர் என்று சமுர்த்தி வறுமை ஒழிப்புப் பிரதி அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

அம்பாறையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இத்தகவலைத் வெளியிட்டார்.

சமுர்த்தி உத்தியோகத்தர்களின் கல்வித் தகைமைகள் பரீட்சைத் திணைக்களத்தினால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று அவர் மேலும் கூறினார். (ஒ-9)

# மிதிவெடி அகற்றும் பணிக்கு 80 கிராமங்கள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூன்24

அடுத்த ஆறு மாத காலப்பகுதியில் யாழ்.குடாநாட்டில் மிதிவெடி அகற்றுவதற்கென 80 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்த மாதம் முதல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை யாழ்.குடாநாட்டில் மிதிவெடி அகற்றுவதற்கான திட்டங்களைத் தயாரிப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்செயலகத்தில் இடம்பெற்றது.

அக்கலந்துரையாடலிலேயே மிதிவெடி அகற்றுவதற்கென 80 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் முன்னுரிமை அடிப்படையில் மிதிவெடி அகற்றுவது என்று நேற்றைய கலந்துரையாடலில் தீமானிக்கப்பட்டுள்ளது.

யாழ்மேலதிக அரச அதிபர் ஆசிவசுவாமி தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் மாவட்ட மிதிவெடி செயற்றிட்ட ஆலோசகர் ரிம் கோணம், ஹலோ ட்ரஸ்ற் நிறுவனத்தைச் சேர்ந்த வலன், டனிஸ் மிதிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த போல்ட், இராணுவ மிதிவெடி அகற்றும் பொறியியல் பிரிவைச் சேர்ந்த மேஜர் கெப்பிற்றிகல, யாழ் செயலகத் திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை மற்றும் யாழ்செயலக மிதிவெடி செயற்பாட்டுப் பிரிவுப் பொறுப்பதிகாரி எல்மோ ஆனந்தராசா உட்பட பிரதேச செயலர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ஒ-5)

# வன்னியிலிருந்து மணல் ஏற்றி வந்தவர்களுக்கு அபராதம்!

தென்மராட்சி,ஜூன்24

வன்னிப்பகுதியிலிருந்து மணல் ஏற்றிவந்த லொறியினையும் தென்மராட்சி கிழக்குப் பகுதியில் மணல் ஏற்றிவந்த லொறி மற்றும் உழவு இயந்திரம் ஆகியவற்றினையும் கொடிகாமம் பொலீஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைப்பற்றினர்.

புதுக்குடியிருப்புப் பகுதியிலிருந்து மணல் ஏற்றிவருவதற்கு அப்பகுதிப் பிரதேச செயலரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் பிரதேச செயலரின் வேண்டுகோளின் பிரகாரம் கடந்த 16ஆம் திகதிவரை செல்லுபடியாகும் என்று சாவகச்சேரி நீதிமன்றம் ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தது.

அந்தக் கால அவகாசம் முடிந்த நிலையிலேயே இந்த மூன்று வாகனங்களும் கைப்பற்றப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தொடரப்பட்டன.

வழக்குகளை விசாரணை செய்த பதில் நீதிவான் செ.பாலகிருஷ்ணன், மூன்று வாகனங்களுக்கும் அபராதம் விதித்தார்.

ஒரு வழக்கில் லொறியின் சாரதியான பரமசாமி பிரதீபன், உதவியாளரான தாமோதரம்பிள்ளை குமாரசாமி ஆகியோருக்கு தலா 6ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து மணலை மட்டுவில் வேரறகேணிக் கந்தசுவாமி கோயிலுக்கு வழங்குமாறும் -

மற்ற வழக்கில் லொறியின் சாரதியான தம்பிராசா பிரதீபன் என்பவருக்கு 12 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து மணலை சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் கோயிலுக்கு வழங்குமாறும் -

உழவு இயந்திரத்தில் மணல் கொண்டுவந்த கனகரத்தினம் சின்னராசா, சின்னராசா தர்சன் ஆகியோருக்கு தலா ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்துமாறும் - உத்தரவிடப்பட்டது. (ஒ-117)





நல்லூர் சங்கிலியன் மன்ற சனசமூக நிலையத்தின் 59ஆவது ஆண்டு விழாவையொட்டி இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளின் போது யாழ். மாநகரசபை உத்தியோகத்தர் ரி.சோமசுந்தரம் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நல்லூர்ப் பிரதேச செயலர் திருமதி எஸ்.தெய்வேந்திரன், நிலையத் தலைவர் ச.பிரேமதாஸன், கிராம அலுவலர்களான எஸ்.லக்ஷ்மிகாந்தன், இ.சந்திரகுமார், கல்வி அலுவலக அலுவலர் பூ.புலேந்திரராசா ஆகியோர் அமர்ந்திருப்பதை முதல் படத்திலும் -

விழாவையொட்டி இடம்பெற்ற சைக்கிள் ஓட்டப்போட்டியில் பங்கு கொண்ட சிறுவர்களை அடுத்த படத்திலும் - காணலாம். (ஐ)


## மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர் தினம்

யாழ்ப்பாணம்,ஜூன்24

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் பொ.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக 'நிக்கொட்' திட்டப் பணிப்பாளர் ரி.லங்காநேசனும் சிறப்பு விருந் தினராகத் தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலனும், கௌரவ விருந்தினராகக் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நினைவுப் பேருரையை மகரகம என்.ஐ.ஈ.நிறுவனத்தின் பணிப்பாளர் யு.நவரத்தினம் நிகழ்த்துவார். (-10-ரி)



வட்டு. கிழக்கு, சித்தன்கேணி ஜனசக்தி சனசமூக நிலையம் அண்மையில் நடத்திய சமூக மேம்பாட்டு அறிவியல் கருத்தரங்கின்போது மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன. இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய வலி.மேற்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ், நிலைய உறுப்பினர் ஒருவருக்கு மரக்கன்று ஒன்றை வழங்குவதைப் படத்தில் காணலாம். நிலையத் தலைவர் என்.செல்வராசாவும் படத்தில் உள்ளார். *(படம்: வலி. தென்மேற்குச் செய்தியாளர்)*

# 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் விவசாய உபகரணங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்24

யாழ். மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் தேவைகருதி 'நிக்கொட்' திட்டத்தினால் யாழ். கமநல சேவைத் திணைக்களத்துக்கு ஒரு தொகுதி விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

7 உழவு இயந்திரங்கள், 120 நீர் இறைக்கும் இயந்திரங்கள், 100 தெளிகருவிகள், 12 விசைத்தெளிகருவிகள, 12 அரிவிவெட்டும் இயந்திரங்கள் என்பனவே வழங்கப்பட்டுள்ளன.

அவை அனைத்தும் யாழ். மாவடடத்திலுள்ள கமநல சேவைத் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டு விவசாயிகள் பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (-4-173)

# நஷ்டஈட்டுக்கான பொலீஸ் அத்தாட்சி; துரிதமாகப் பெற நடவடிக்கை எடுக்குக!

## சாவகச்சேரி நகர மக்கள் சார்பில் பொலீஸாரிடம் கோரிக்கை

சாவகச்சேரி,ஜூன்24

தென்மராட்சியில் போரினால் சேதமடைந்த வீடுகளுக்கு நஷ்டஈடு பெறுவதற்கான பொலீஸ் அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் உள்ளன. அவற்றை விரைவாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு பொதுமக்கள் சார்பில் பொலீஸாரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

சாவகச்சேரி நகர்ப்புறப் பகுதியில் பொலீஸ் - பொதுமக்கள் நட்புறவு ரீதியான கலந்துரையாடல் கடந்த திங்களன்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

சாவகச்சேரி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.பி.என். அபயுரத்ன தலைமையில் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஏ.எரிக்றோகிதவின் வழிப்படுத்தலில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் எஸ்.ஏ.ஈ.எரிக்றோகித உரை நிகழ்த்துகையில் -

சாவகச்சேரி பொலீஸ் பிரிவுக்குட்பட்ட 32 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் குற்றச் செயல்கள் மற்றும் தீய செயல்களைப் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் கட்டுப்படுத்த உத்தேசித்துள்ளோம். தற்பொழுது கைதடி, மட்டுவில் தெற்கு ஆகிய கிராம சேவை அலுவலர் பிரிவுகளில் பொதுமக்கள் - பொலீஸார் நட்புறவுக் குழுக்களை அமைத்துள்ளோம். இதன்மூலம் கிராமங்களில் பொலீஸாரும் பொதுமக்களும் இணைந்து செயற்பட்டு நல்ல சமுதாயத்தை உருவாக்கத் திடசங்கற்பம் பூணவேண்டும். அதற்கு சகலரது பங்களிப்பும் அவசியம் - என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து பொலீஸ் பொறுப்பதிகாரி எஸ்.பி.எஸ்.அபயரத்ன உரை நிகழ்த்துகையில் -

பொலீஸ் - பொதுமக்கள் நட்புறவுக் குழுக்கள் மூலம் பல பிரச்சினைகளை இனங்கண்டு தீர்க்கலாம். எனவே, பொதுமக்கள் தங்கள் குறைகளை எமக்கு முறையிடுங்கள். எமது தரப்பில் யாராவது தவறுகள் செய்தாலும் அதனையும் எமக்கு முறையிடுங்கள். அப்போதுதான் நாம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம். விபததுகள் இடம்பெறும்போது விபத்துக்குள்ளானவர்கள் சமாதானமாகச் செல்ல முற்படுகிறார்கள். ஆனால் அந்தவேளை, அவர்கள் சமாதானமாகச் சென்றாலும் நாம் சில சட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டி உள்ளது. இவ்வாறாக அவர்கள் சமாதானமாகச் செல்வதால் மேலும் அவர்கள் விபத்துக்களைத் தூண்டுபவர்களாக மாறிவரும் அவலம் காணப்படுகிறது - என்று தெரிவித்தார்.

ஏ-9 கண்டி வீதியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இருந்து சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் வரையான பகுதியில் வாகனங்களின் வேகத்தைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும்போது மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்களில் அவர்களின் பின்னால் இளைஞர்கள் சென்று தொல்லைகள் கொடுக்கும் நிலையைத் தடுக்கக் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரப்பட்டது.

இக்கலந்துரையாடலில் சாவகச்சேரி இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.இராசகோபால், மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.சிவபாலன், தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் என்.இராசதுரை, சாவகச்சேரி இந்துக்கல்லூரி உப அதிபர் எஸ்.பத்மநாதன், சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி செ.அம்பிகைபாகன் உட்பட சாவகச்சேரி நகர வர்த்தகர்கள், பொதுமக்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-31)

## இளைஞர், யுவதிகளுக்கு எச்சரிக்கை

வலி.வடக்கு,ஜூன்24

உடைந்த வீட்டில் தகாத முறையில் நடக்க முற்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

அளவெட்டியில் உள்ள உடைநத வீடொன்றினுள் இருந்து நான்கு இளைஞர்களும் இரு யுவதிகளுமே இவ்வாறு பொதுமக்களால் பிடிக்கப்பட்டவர்களாவர்.

இவர்களில் ஒருவர் வெளிநாடு ஒன்றிலிருந்து அண்மையில் யாழ்ப்பாணம் திரும்பியவர் என்று கூறப்பட்டது. இவர்கள் 6 பேரும் பொதுமக்களினால் பிடிககப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர். (-4-86)

# சாயி சிந்தனை

## சமுதாயம் சிறக்கத் தனிமனிதன் திருந்தவேண்டும்



நீ சமுதாயத்தில் ஓர் அங்கத்தினன். சமுதாயத்தின் அங்கத்தினர்கள் நல்லமுறையில் இயங்கினால்தான் சமுதாயம் நற்பெயர் பெறும். சமுதாயம் நல்லபடியாக இருக்கவேண்டுமானால் தனிப்பட்ட மனிதன நல்லவனாக வேண்டும். சமுதாயமும் தனிமனிதனைச் சார்ந்தே இருக்கிறது. தனிமனிதன் நல்லவனாக இருக்கும்போது சமுதாயமும் நல்லபடியாக இருக்கும். சமுதாயம் மாறவேண்டுமானால் நீ போய சொற்பொழிவாற்றுவதில் பயனில்லை. முதலில் நீ முன்னுதாரணமாக நடந்து கொள். தனிமனிதன் மாறும்போதுதான் சமுதாயமும் தானாக மாறுகிறது. அவன் நல்லவனாகும்போது சமுதாயமும் நல்லதாகிறது. நீ நல்லபடியாக மாறாமல், சமுதாயத்திற்கு நன்மை ஏதும் செய்யமுடியாது. நீ நல்லவனாக மாறு. உன் இதயத்தைப் பவித்திரமாக மாற்றிக்கொள். அப்போது சமுதாயத்தைப் பவித்திரமாக மாற்ற முயற்சி செய்யும் அருகதை உனக்கு உண்டாகிறது. "தாட்சயம் ஏக பதம் தர்மம்" தர்மத்தை நிலைநாட்ட முதலில் நீ நேரான பாதையில் நடக்கவேண்டும். அப்போதுதான் தர்மத்தை நிலைநாட்ட, போஷிக்க, பாதுகாக்க உனக்கு உரிமை கிடைக்கிறது. அரிச்சந்திரன் தர்மம் செய்தான்; தானம் செய்தான். அவனுக்கு அவற்றைச் செய்ய எல்ல அருகதையும் இருந்தது. எல்லாவற்றையும் தியாகம் செய்தான். கடைசியில் தன் மனைவியையும் மகனையும் கூடத் தியாகம் செய்தான். மயானத்தில் வேலை பார்த்தான். எத்தனையே கஷ்டங்களை அனுபவித்தான். இருப்பினும் தன் நிலை பிறழவில்லை; தவறவில்லை. தர்மத்தை எந்நேரமும் நிலைநாட்டத் தயாராக இருக்கவேண்டும்.

*(ஆதாரம்: சனாதன சாரதி)*

அருந்தவம் கிடந்தீன்று — ஆளாக்கி எமை வளர்த்த
ஆருயிர் அன்னைக்கு...

# 31ஆம் நாள் நினைவு மலர்க் கலசம்

மண் மகிழ 30 – 01 – 1931



கண் நெகிழ 25 – 05 – 2004

# திருமதி ஆறுமுகம் கனகம்மா

[இளைப்பாறிய ஆசிரியை, சாவ/கமலாம்பிகை வித்தியாசாலை]

ஆருயிரே! அறிவூற்றே! அன்பின் அம்மா!
ஆற்றல்பல எமக்கீந்த அறிவுத் தாயே!
பேரமுதே! பெரும்பாசப் பேறே! எங்கள்
பெருமைக்கு வித்திட்ட பெண்ணின் விளக்கே!
பாருயரும் ஆறுமுக ஜே.பி. போற்றும்
பத்தினியே! பதியவர்பால் பறந்திட்டீரோ?
நீருயரும் கண்களுடன் நெஞ்சம் நொந்து
நெக்குருகி அஞ்சலித்தோம்! அமைதி கொள்க!

ஆருயிர் அன்னையின் ஆத்ம சாந்திக்கு
எம் அகம் நெகிழ்ந்த அஞ்சலிகள்

"ஜெயபதி",
தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

– குடும்பத்தினர்.

[33390][42-16-17]

## சைவவித்தியா விருத்திச் சங்கம்
## பதவி வெற்றிடம் - கணக்குப் பதிவியலாளர்

சங்கக் கணக்குப் பதிவியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

தகைமைகள்:

க.பொ.த. (உயர்தரம்) கணக்கியல் உட்பட 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கு அலுவல்கள் பற்றிய 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்;

அல்லது

கணக்கியல் அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் பற்றிய எழுதுவினைஞர் பதவியொன்றில் 3வருடங்களுக்குக் குறையாத அனுபவம்;

அல்லது

கணக்குப்பதிவாளர் / நிறுவன மத்திய பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கு அலுவல்கள் சம்பந்தமாக 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

வயதெல்லை: 30-60

ஊதியம்: பேசி நிர்ணயிக்கப்படும்.

விண்ணப்பக் கடித உறையின் இடது பக்கத்தில் 'கணக்குப் பதிவியலாளர் விண்ணப்பம்' எனக் குறிப்பிடுக.

**விண்ணப்பம் கிடைக்க வேண்டிய இறுதி நாள்: 10-07-2004**

அ.தற்பரானந்தன். தலைவர். சு.பசுபதி செயலாளர்.

(C/35745)(42-13-24)

சைவ வித்தியாவிருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், இலங்கை.


## கூட்டுறவுச் சங்கத் தலைமை அலுவலகம் புனரமைப்பு

தென்மராட்சி,ஜூன்24

கொடிகாமத்தில் உள்ள தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமை அலுவலகம் 15 வருடங்களின் பின்னர் புனரமைக்கப்பட்டுள்ளது.

புனரமைப்பு வேலைக்கென சங்க நிதியிலிருந்து 2லட்சத்து 60ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-117)


விசாலமான இடப்பரப்பில்

**Power Gym Body Care & Fitness Center**

230/1, நாவலர் வீதி (ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம்.

☎ 0777 252098

(33111)(26-13-24)



## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)
## வர்த்தக முகாமையாளர் பதவிக்கான வெற்றிடம்

1. சம்பள அளவுத்திட்டம் $\frac{5000-7300}{110X10-120X10}$ (கூ.வே.ஆ.சுற்று நிருபம் 31/99இன் படி)

   குறியீட்டு இல: 106/9
2. வயது - 25 தொடக்கம் 45 வரை (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)
3. விண்ணப்ப முடிவு திகதி 30.06.2004
4. பிணைப்பணம் - உரொக்கம் ரூபா 15,000/- ஆதனம் ரூபா 25,000/-
5. (1) சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
   (2) சங்கத்தில் ரூபா 10/- செலுத்திப் பெற்றுக்கொண்ட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.
   (3) மேலதிக விவரங்களைச் சங்கப்பணிமனையில் அறிந்துகொள்ளலாம்.
6. வேறு சங்கங்களிலிருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்களுடைய சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
7. விண்ணப்பங்கள் பொது முகாமையாளர், சங்கானை ப.நோ. கூ.சங்கம் (வ.உ.), பிரதான வீதி, சங்கானை என்ற முகவரிக்கு "வர்த்தக முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் எழுதப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
8. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

அ. கூட்டுறவுப் பணியாளர் 10ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 3வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11ஆவது சம்பளத் திட்டத்தில் மேற்குறித்த பதவிகளில் 6வருடத்திற்குக் குறையாத அனுபவம்;

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான தகைமையுடன் சந்தைப்படுத்தல் வழங்கல், பொருள் விநியோகம், பொருள்களின் இறக்குமதி, ஏற்றுமதி ஆகிய துறைகளில் ஒன்றின் அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் முகாமை மட்டத்திலான பதவியில் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் / வர்த்தக ஸ்தாபனமொன்றில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்;

அல்லது

இ. கூட்டுறவுத் தராதரப்பத்திரம் (உயர்தரம்) / க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியும் சந்தைப்படுத்தல், வழங்கல் பொருள் விநியோகம், பொருள் இறக்குமதி, ஏற்றுமதி ஆகிய துறைகளில் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் முகாமை மட்டத்திலான பதவியில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் நான்கு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

க.இராசதுரை

பொது முகாமையாளர், சங்கானை ப.நோ.கூ.சங்கம்.



## முதலாம் வருட அஞ்சலி

தோற்றம் 17 - 10 - 1942



மறைவு 24 - 06 - 2003

கலைஞான சேகரி

**அமரர் அந்தோனிப்பிள்ளை றோக்கு**

ஓராண்டு காலம் கடந்து போனாலும்
உங்கள் நினைவு மறந்து போகாது தினமும்
உங்களை நினைந்தே நாம் இவ்வுலகில் வாழ்கின்றோம்.

இன்று (24.06.2004) வியாழக்கிழமை அவரது ஆத்மா சாந்தி அடைவதற்காகச் செம்பியன்பற்று பிலிப்பினேரியா தேவாலயத்தில் திருப்பலிப் பூசை இடம்பெறும்.

செம்பியன்பற்று வடக்கு, செம்பியன்பற்று. (33311)(26-13-24)

பிரிவால் துயருறும்: அன்பின் குடும்பத்தினர்.



## ஆள்கள் தேவை

எமது விலாஸ்•க்கு,
- ★ ரீ மேக்கர்
- ★ பரிமாறுபவர்
- ★ சுவீற் மேக்கர்

ஆகியோர் தேவை.

தகுதி வாய்ந்தவர் மட்டும் உடனே நேரில் சமுகந்தரவும்.

**அபிராமி விலாஸ்**

212, இராமநாதன் வீதி, திருநெல்வேலி.

☎ 021 222 2360

(33391)(13-35-24)



## ஆசிரியர் பதவிக்கான போட்டிப் பரீட்சை வகுப்பு 2004

ஆரம்பம் 26.06.2004சனி காலை 9மணி

கட்டணம் ரூபா 250/=

பட்டப்படிப்புகள் கல்லூரி 57/18, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

*அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.*

(C/35759)(35-13-24)



## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)
## கணக்காளர் பதவிக்கான வெற்றிடம்

1. சம்பள அளவுத்திட்டம் $\frac{5000-7300}{110X10-120X10}$ (கூ.வே.ஆ.சுற்று நிருபம் 31/99இன் படி)

   குறியீட்டு இல.: 104/9
2. வயது - 25 தொடக்கம் 45 வரை (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)
3. விண்ணப்ப முடிவு திகதி 30.06.2004
4. பிணைப்பணம் - உரொக்கம் ரூபா 15,000/- ஆதனம் ரூபா 25,000/-
5. (1) சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
   (2) சங்கத்தில் ரூபா 10/- செலுத்திப் பெற்றுக்கொண்ட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.
   (3) மேலதிக விவரங்களைச் சங்கப்பணிமனையில் அறிந்துகொள்ளலாம்.
6. வேறு சங்கத்திலிருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்களுடைய சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
7. விண்ணப்பங்கள் பொது முகாமையாளர், சங்கானை ப.நோ. கூ. சங்கம், சங்கானை என்ற முகவரிக்கு "கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் எழுதப்பட்டுப் பதிவுத்தபால்மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
8. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

அ. கூட்டுறவுச் சங்க ஊழியர் 10ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்காளர்/உள்ளகக் கணக்குப் பரிசோதகர் பதவியொன்றில் மூன்று (3) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 11ஆம் சம்பளத்திட்டத்தில் கணக்காளர் / உள்ளகக் கணக்குப் பரிசோதகர் பதவியொன றில் ஆறு (6) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்;

அல்லது

ஆ. பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனத்தின் தகுதிச் சான்றிதழ் பரீட்சை அல்லது ஆகு செலவு முகாமைக் கணக்காளர் நிறுவனத் தேர்ச்சிச் சித்தி கட்டம் 1 அல்லது இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி கணக்கியல் டிப்ளோமா அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகக் கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்காளர்/உள்ளகக் கணக்குப் பரிசோதகர் பதவியொன்றில் இரண்டு (2) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

குறிப்பு: 1 வருட ஒப்பந்த அடிப்படை (பின்னர் இதுபற்றி ஆராயப்படும்)

க.இராசதுரை

பொது முகாமையாளர், சங்கானை ப.நோ.கூ.சங்கம்

(சி-35752) (33-13-24)




உ

குகமயம்

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்
## தொண்டைமானாறு







## சகஸ்ர மகா (1008) சங்காபிஷேகம்

நிகழும் தாரண வருடம் ஆனி மாதம் 11ஆம் நாள் நாளை (25.06.2004) வெள்ளிக்கிழமை ஆனி உத்தர நன்னாளில்

## சகஸ்ர மகா சங்காபிஷேகம்

| | | |
|---|---|---|
| சங்குப் பூஜை | அதிகாலை | 4.30 மணி |
| சங்காபிஷேகம் | காலை | 7.00 மணி |
| சண்முக அர்ச்சனை | காலை | 9.00 மணி |

காலை 10.00 மணியளவில் விசேட மேளக் கச்சேரியுடன் முருகப்பெருமான் திருவீதிவலம் வந்தருளுவர்.

அன்று விசேடமாக அன்னதானம் வழங்கப்படும்.

முருகன் அடியார்கள் அனைவரும் வந்து தரிசித்து அருள் பெற்றுய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

உபயம்: பொன்னம்பலம் சிவஞானம் குடும்பம் சங்கத்தானை, சாவகச்சேரி.

ஆலய உரிமையாளர்: அரியரத்தின ஐயர் லோகேஸ்வர ஐயர்.

(33363) (24-13)

# ஐரோப்பாவில் உயர்கல்வி

பாடசாலையை விட்டு விலகியோருக்கும், க.பொ.த. உயர் தர மாணவர்களுக்கும், பள்ளிப் படிப்பு முடித்தவர்களுக்கும் ஐரோப்பாவில் உயர்கல்வி பெற வசதி.

தெரிவு வாய்ப்புள்ள கல்வித் துறைகள்

- ★ மருத்துவம் ★ பொறியியல்
- ★ வியாபாரக் கற்கை நெறிகள் (Business)

விசா உத்தரவாதமுள்ளது.

2004 செப்ரெம்பர் அனுமதிக்கு எவரும் விண்ணப்பிக்கலாம்

மேலதிக தகவல்களுக்கு:-

T.P:- 021 222 7133

(33409)(35-34-14)


# மோட்டார் சைக்கிள் மோதியதில் இருவர் காயம்!

கரவெட்டி,ஜுன்24

வீதியில் சைக்கிளில்சென்ற விறகு வியாபாரியுடன் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் இருவர் படு காயமடைந்துள்ளனர்.

புலோலி, சாரையடியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் துன்னாலை, வேம்படிப் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளை களின் தந்தையான சண்முகம் சூரிய குமார் (வயது 30) என்ற விறகு வியா பாரி படுகாயமடைந்து பருத்தித் துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து. வந்த உடுப்பிட்டியைச் சேர்ந்த எஸ்.யோகேஸ்வரனும் (வயது22) மோட்டார் சைக்கிளிலிருந்து கீழே விழுந்ததால் படுகாயமடைந்து பருத் தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் பின்னர் மேல திக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளார்.

(-10-70)


மல்லாகம்

# சதாகாயமாதா ஆலய வருடாந்தத் திருவிழாவும் பொன்விழாவும்

1954 - 2004 27.06.2004

- ★ நற்கருணைவிழா - மாலை 5.00மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து யாழ். மறைமாவட்ட இறை தியானக் குழுவினரால் நடத்தப்படும் குணமாக்கல் வழிபாடும் நற்கருணைப் பவனியும் இடம்பெறும்.
- ★ 27ஆம் திகதி காலை 7.00 மணிக்குப் பெருவிழாத் திருப்பலி ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும்.
- ★ திருப்பலியைத் தொடர்ந்து திருச்சுரூப பவனி இடம்பெறும்.
- ★ புதிய ஆலயக் கட்டட நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு இடம்பெறும்.

அன்னையின் ஆலயம் புதுப் பொலிவுடன் விளங்க ஆதரவு தாரீர்!

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பங்குத்தந்தையும்,
பங்குமக்களும்.

(33377)(42-34-14)



# குருக்கள் தேவை

கோண்டாவில் தில்லையம்பதி

## அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

மேற்படி கோயில் நித்திய பூசைக்கு நிரந்தரமான குருக்கள் தேவைப்படுகின்றார். தகுதியானவர்களிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விரும்புவோர் 27.06.2004 ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னதாக ஆலய பரிபாலனசபையினருடன் தொடர்புகொள்ள வும்.

- ஆலய பரிபாலன சபை.

சந்திக்கும் நேரம்: காலை 6.00 மணிமுதல் 8.00 மணிவரை
அல்லது மாலை 5.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை

(33424)(34-14)



# துயர் பகிர்கின்றோம்

எமது குடும்ப நண்பர்களான டானியல் சவுந்தரநாதன், மேரி அருந்ததி, டெபோரா பாலசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையார்

## றிச்சேட் ஜோர்ஜ் டேவிட்

அவர்களின் மறைவையொட்டி துயருறும் அவர்களின் கும்பத்தினருடன் நாங்களும் துயர்பகிர்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த் திக்கிறோம்.

திரு.திருமதி இராஜநாயகம்,
இராஜநாயகம் அன் கம்பனி,
பட்டயக்கணக்காளர்கள்.

140,பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (C/35775)(43-34-14)



# துயர் பகிர்கின்றோம்



அமரர் S.திருநடராஜா
M.L.T.
(மெடிக்குவிக் ஸ்தாபன உரிமையாளர்)

மல்லாகம், தெல்லிப்பழை லயன்ஸ்கழகத்துடன் இணைந்து பல காலமாக யுத்தத்தினால் அதிகம் பாதிப்புற்ற வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் வாழும் மககளுக்கு எங்களால் நடத் தப்பட்ட மருத்துவ முகாம்களில் தனது "மெடிக்குவிக்" ஸ்தாபனத்தின் சேவையை இலவசமாக வழங்கி உதவிய பெரியாரின் மறைவையொட்டி வருந்தும் குடும்பத்தாருடன் இணைந்து துயர்பகிர்கினறோம். அன்னாரின் ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திக்கின்றோம்.

லயன்
வாலாம்பிகை சிறிபாஸ்கரன்
கழகத் தலைவர்
மல்லாகம்/தெல்லிப்பழை.

லயன் S.S.தங்கராஜா
மாவட்ட இணைப்பாளர்
(வடக்கு).

லயன் டாக்டர்
ருக்மணி ராஜா
கழகச் செயலாளர்,
(அர்ச்சனா
வைத்தியசாலை).

(33396) (34-14)



# நினைவஞ்சலி

28 ஆம் ஆண்டு 2 ஆம் ஆண்டு





அமரர்
ஐயம்பிள்ளை அருணாசலம்

திருமதி
அருணாசலம் கண்மணியம்மா

| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
|---|---|---|---|
| 21-02-1905 | 16-06-1976 | 21-09-1921 | 17-06-2002 |

திதி:24.06.2004

எம்மையெல்லாம்.......வையத்துள் வாழ்வாங்கு
வாழ வைத்தீர்.....நீவிர் மேன்மைபெற்று
மேலான பதமடைந்தீர் தூண்டாமணி
விளக்காய் இருந்து எழுவரையும் சிறப்புற வைத்தீர்
அன்பான ஐயா......அம்மா, பிள்ளைகளால் பெருமை
பெற்றனர் பெற்றோர் ..ஈங்கு உங்களைப்
பெற்றோராய்ப் பெற்றதனால் பிள்ளைகள் யாம்
எழுவரும் பெற்றோம் பாக்கியம்........ஒருகொடியில்
குலுங்கும் கனிகளாய் உங்களை அஞ்சலித்தோம் இன்று!

யமுனா வீதி, நல்லூர். (33425)(34-14) - பிள்ளைகள்.



உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# பூப்புனித நன்நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் ஆனி மாதம் 11ஆம் நாள் (25-06-2004) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி முதல் 11.30 மணிவரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில்

எமது புத்திரி திருநிறை செல்வி

## மஜிந்தா அவர்களுக்கு

பூப்புனித மங்கள நீராட்டுவிழா நடத்த இறையருள் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.வே.இராசேந்திரம்
திருமதி இ.நிர்மலா
(இராசேந்திரம் நகைத் தொழில் அகம்
275/A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.)

தொல்புரம்,
பத்தானைக்கேணியடி, சுழிபுரம். (33428)(42-34-14)



# மீனாட்சி மிஷன் மருத்துவமனை ஆராய்ச்சி மையம்

MMHRC Healing with Care and Compassion

MEENAKSHI MISSION HOSPITAL AND RESEARCH CENTER

லேக் ஏரியா, மேலூர் ரோடு, மதுரை-625107, இந்தியா

**இலங்கை வாழ் தமிழர்களுக்குக் குறைந்த செலவில் உலகத் தர மருத்துவம் பெற வசதியாகச் சில திட்டங் கள் உள்ளன.**

ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-

| | |
|---|---|
| இலங்கை | :- திரு. லெனின் கோபால்<br>247, கிராண்ட்பாஸ் சாலை,<br>கொழும்பு -14. |
| தொலைபேசி | :- 011-4610627 (அல்லது) 0785109710 |
| யாழ்ப்பாணம் தொலைபேசி | :- 0776 333018 |

குறிப்பு:

மீனாட்சி மிஷன் மருத்துவமனை 500 படுக்கைகள் கொண்ட S.R அறக்கட்டளையின் கீழ் செயற்படுகின் றது. இங்கு சிகிச்சைபெறுபவர்களுக்கு 50% கட்ட ணச்சலுகை அளிக்கப்படும். அதாவது, கொழும்பில் உள்ள பெரிய மருத்துவ மனைகளில் ஆகும் செலவில் அரைவாசிக் கட்டணமே இங்கு அறவிடப்படும். அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளவும்.

(33416)(34-14)

# ஐரோப்பியக் கிண்ணக் காற்பந்துப் போட்டியின் கால் இறுதிப் போட்டிக்கு பிரான்ஸ் தெரிவு

ஐரோப்பியக் கிண்ணக் காற்பந்துப் போட்டியில் பிரான்ஸ் அணி சுவிஸ்ஸர்லாந்து அணியை 3:1 என்ற கோல் கணக்கில் வென்று காலிறுதிக்குத் தகுதிபெற்றுள்ளது.


இப்போட்டியின் துவக்கத்தில் இருந்தே இரு அணிகளும் சளைக்காமல் கடுமையாகப் போராடின. இதனால் எந்த அணி முதலில் கோல் அடிக்கப்போகிறது என்ற ஆர்வம் ரசிகர்கள் மத்தியில் அதிகமாகக் காணப்பட்டது. பிரான்ஸ் அணியில் மார்சல் டிசெய்லிக்குப் பதிலாக நட்சத்திர வீரரான ஜினடின் ஜிடேன் கப்டனாகக் களமிறககப்பட்டார். கப்டன் என்ற கூடுதல் பொறுப்புடன் விளையாடிய ஜிடேன, ஆட்டத்தின் 20 ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பு மூலம் அணியின் முதல் கோலை அடித்தார்.

இதற்குப்பின் தாக்குதல் பாணியிலான ஆட்டத்துக்கு மாறிய சுவிஸ்ஸாலாந்து அணி 26 ஆவது நிமிடத்திலேயே ஒரு கோல் அடித்து சமன் செய்தது. இந்தக் கோலை அடித்த வான்லன்தன் தொடரில் மிக இளம் வயதில் கோல் அடித்தவர் என்ற சாதனையைப் படைத்தார்.

ஆட்டத்தின் ஒவ்வொரு நிமிடத்திலும் பிரான்ஸுக்கு நிகராக சுவிஸ்ஸர்லாந்து விளையாடியது. இதையடுத்து பிரான்ஸ் அணியில் மாற்றம் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. முன்னணி வீரர் டேவிட் டிரசிகியுட்டிற்குப் பதிலாக லூயிஸ் சாகா களமிறக்கப்பட்டார். சாகா வந்தவுடன் பிரான்ஸின் கை மேலோங்கியது. இவர் அடித்த பந்தைப் பெற்ற தியரி ஹென்றி 76 ஆவது நிமிடத்தில் அபாரமாகக் கோல் அடித்தார். பின்னர் 84 ஆவது நிமிடத்தில் இன்னொரு கோல அடித்த ஹென்றி அணியை காலிறுதிக்கு அழைத்துச்சென்றார்.

'பி' பிரிவில் 7 புள்ளிகளுடன் முதல இடம் பெற்றுள்ள பிரான்ஸ் அணி காலிறுதியில் 'ஏ' பிரிவில் இரண்டாம் இடம் பெற்றுள்ள கிரீஸ் அணியைச் சந்திக்கவுள்ளது.

சுவிஸஸர்லாந்து சார்பில் கோல் அடித்த வான் லன்தன் ஐரோப்பியக் கிண்ணக் கால்பந்து வரலாற்றில் மிக இளம் வயதில் (18 ஆண்டுகள் 141 நாள்கள்) கோல் அடித்தவர் என்ற சாதனையைப் படைத்தார். இவர் சமீபத்தில் இங்கிலாந்தின் வெய்ன்ரூனே நிகழ்த்திய சாதனையை முறியடித்தார். சுவிஸஸர்லாந்துக்கு எதிரான இரண்டாவது லீக் போட்டியில் 2 கோல அடித்த ரூனே, இளம் வயதில (18 ஆண்டு 237 நாள்கள்) கோல் அடித்தவர் என்ற சாதனையைப் படைத்து இருந்தார். சுவிஸஸர்லாந்துக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட சாதனையை இப்போது சுவிஸஸர்லாந்து வீரர் ஒருவரே முறியடித்துள்ளார். (10)



## விம்பிள்டன் டெனிஸ் முதல்சுற்றில் தாய்லாந்தின் ஸ்ரீசாப்பன் தோல்வி

லண்டன்,ஜூன்24

விம்பிள்டன் டெனிஸ் போட்டியில தாய்லாந்தின் ஸ்ரீசாப்பன் அதிர்ச்சித் தோல்வி அடைந்தாலும், மற்றொரு தாய்லாந்து வீரர் தாமரின் டாமி வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் தாமரின் டாமி 6-2,6-0 என்ற நேர் செட்களில் ஜேர்மன் வீரர் குரோன் பெல்டைத் தோற்கடித்தார்.

முதல் நாள் ஆட்டத்தில் முன்னாள் சம்பியனான குரோஷியா வின் கோரன் இவானிசெவிக் 6-3, 7-6,6-2 என்ற செட்கணக்கில் தரவரிசையில் 3ஆவது இடத்தில் உள்ள மிகையில் யூனியைத் தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் பிரிவில் ஜென்னா டோகிக, வீனஸ் வில்லியமஸ், பிரெஞ்ச ஒபென் சம்பியன் மிஸ்கினா உள்ளிட்ட முன்னிலை வீராங்கனைகள் வெற்றி பெற்றுள்ளனர். (10)

ஐரோப்பியக் கிண்ணத்தில்

## இங்கிலாந்துவீரர் வெய்ன்ருனே 4கோல்கள் அடித்து முதலிடத்தில்

இங்கிலாந்தின் இளம் நட்சத்திரமான வெய்ன்ருனே மொத்தம் 4 கோல்களுடன் ஐரோப்பியக் கிண்ணக் காற்பந்துத் தொடரில் இதுவரை நடந்த போட்டிகளில் அதிக கோல் அடித்தவராகிறார். 16 சர்வதேச போட்டிகளில் 9கோல்கள் அடித்துள்ள இவர் குரோஷியாவுக்கு எதிராக 2கோல் அடித்தது பற்றிக் கூறுகையில், எப்படி அடித்தேன் என்பது எனக்கே தெரியாது.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவேண்டும் என்ற உறுதியுடன் தான் களமிறங்கினேன். அணியின் சக வீரர்கள் நல்லவாய்ப்பை ஏற்படுத்தித் தந்ததால்தான் கோல் அடிக்க முடிநதது என்று பெருந்தன்மையுடன் தெரிவித்துள்ளார்.

## பாக். அணியின் முன்னாள் தலைவர் இம்ரான்கான் தனது மனைவியை விவாகரத்துச் செய்தார்

இஸ்லாமாபாத்,ஜூன்24

பாகிஸ்தான் அணியின் முன்னாள தலைவர் இம்ரான்கான் தனது காதல மனைவி ஜெமிமாவை விவாகரத்து செய்துள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிகெட்டின் தலைசிறந்த வீரர் இம்ரான்கான், கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றபிறகு தீவிர அரசியலில் ஈடுபட்டுள்ளார். 1995 இல், பிரிட்டனைச் சேர்ந்த கோடீஸ்வரர் ஒருவரின் மகள் ஜெமிமாவை காதல திருமணம் செய்துகொண்டார். திருமணத்துக்கு பிறகு முஸ்லிம் மதத்துக்கு மாறிய ஜெமிமா, இம்ரானுடன் பாகிஸ்தானில் குடும்பம் நடத்தினார். இருவருக்கிடையிலான ஒன்பது ஆண்டு கால காதல் வாழ்க்கை முடிவுக்கு வந்திருக்கிறது.

நானும், ஜெமிமாவும் பிரிந்துவிட்டோம் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் இருவருக்குமே இது வருத்தமான விசயம்தான். பாகிஸ்தான் நடைமுறைகளுக்கேற்ப அவரால் வாழ முடியாததும் இந்த முடிவுக்கு முக்கிய காரணம். இங்குள்ள சூழ்நிலைகளை அனுசரித்து வாழ அவர் நிறைய முயற்சித்தபோதும், எனது அரசியல் வாழ்க்கையுடன் ஒத்துப்போவது முடியாத காரியமாக இருந்தது. ஆகவே, நாங்கள் இருவரும் எங்களுக்குள் சுமுகமாகப் பிரிந்து கொள்கின்றோம. இவ்வாறு விவாகரத்து தொடர்பாக இம்ரான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

இம்ரான் - ஜெமிமா விவாகரத்து கடந்த சில தினங்களுக்கு முன் லண்டனில் முடிந்துவிட்டதாக அவரது கட்சி நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர். பாகிஸ்தானில் தனது அரசியல் எதிர்காலத்தை முன்னிட்டு இப்படியொரு முடிவுக்கு இம்ரான் வந்திருப்பதாகத் தெரிகிறது. இவர்களுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். இருவரும் ஜெமிமாவுடன் லண்டனில் வசிக்கின்றனர். (10)




இந்தியாவின் சண்டிகாரில் அழகுக்கலை நிலையம் ஒன்று அண்மையில் திறக்கப்பட்டது. இதன் தொடக்க விழாவில் நடிகை மந்த்ராபேடி மற்றும் கிரிக்கெட் வீரர்கள் கங்குலி, ஹர்பஜன்சிங், யுவராஜ்சிங் ஆகியோர் கலந்து கொண்டதைப் படத்தில் கணலாம்.

இன்றைய போட்டியில்

## பிளிண்டொப், ரெஸ்கோதிக் விளையாடுவது சந்தேகமே

இங்கிலாந்து அணியின் நட்சத்திர வீரர்களான பிளின்டொப், ரெஸ்கோதிக் ஆகியோர் காயமடைந்துள்ளதால் இன்று நடைபெறவுள்ள போடடியில் இவர்கள் பங்கேற்பது சந்தேகமாக உள்ளது.

இங்கிலாந்து, நியூஸிலாந்து மேற்கிந்திய அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடரின முதல் போட்டியில் இங்கிலாந்து அணி நியூஸிலாந்தைச் சந்திக்க உளளது.

இந்நிலையில் இங்கிலாந்து அணியின் பயிற்சியாளர் டங்கன்பிளட்சர் கூறுகையில், ரெஸ்கோதிக் அணியில் இடம்பெறும் வாய்ப்புக்கள் உள்ளன. தன்னால் போட்டிகளில் பங்கேற்கமுடியும் என்று அவர் நம்புகிறார். பிளிண்டொப்பின் நிலைதான் சந்தேகமாக உள்ளது. 50 சதவீதமே அவர் இடம்பெற வாய்ப்புக்கள் உள்ளன. இருவருமே அணிக்கு அவசியமான வீரர்கள் என்பதால் இவர்களுக்கு மாற்றான வீரர்கள் கிடைப்பதும் சிரமம். ஒரு வேளை இருவருமே இடம்பெறாத பட்சத்தில் ரொபர்ட்கீ, ரிக்கி கிளார்க் ஆகியோர் அணியில் இடம்பெறலாம் என்றார். (10)

## ஒருநாள் போட்டிகளில் இலங்கைக்கு 3ஆம் இடம்

லண்டன்.ஜூன்24

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளின் அடிப்படையில் அணிகளின் தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்டுள்ளது.

136 புள்ளிகள் பெற்றுள்ள ஆஸ்திரேலியா முதல் இடத்தில் உள்ளது. தென் ஆபிரிக்கா 113 புள்ளிகளைப் பெற்று 2ஆவது இடத்திலும், இலங்கை 110 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும், நியூஸிலாந்து 109 புள்ளிகளைப் பெற்று 4அவது இடத்திலும் இந்திய அணி 107 புள்ளிகளைப் பெற்று 5ஆவது இடத்திலும், பாகிஸதான் 106 புள்ளிகளைப்பெற்று 6ஆவது இடத்திலும் உள்ளன.

இங்கிலாந்து அணி 7 ஆவது இடத்திலும், மேற்கிந்தியத் தீவுகள் அணி 8ஆவது இடத்திலும், ஸிம்பாவே 9ஆவது இடத்திலும், கென்யா 10ஆவது இடத்திலும் பங்களாதேஷ் 11ஆவது இடத்திலும் உள்ளன.(10)

### உள்ளூராட்சி வார விளையாட்டுப் போட்டிகள

யாழ்ப்பாணம்,ஜூன்24


சுழிபுரம் பிரதேச சபையினால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு 45 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெணகளுக்கான போட்டிகள் ஒழுங்கு செயயப்பட்டுள்ளன.

மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புவோர் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு சிரேஷ்ட சன சமூக அபிவிருத்தி அலுவலர் வே.கந்தசாமி கேட்டுள்ளார்.

வேகநடை, பலூன் உடைத்தல், 100 மீற்றர் ஓட்டம், கயிறு இழுத்தல் போட்டிகள் நடைபெறும்.

இதேவேளை சனசமூக நிலைய ரீதியாக கிரிக்கெட் போட்டி, காற்பந்து, கரப்பந்து, தாச்சி மற்றும் மரதன் ஓட்டப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. .(10-185)

# விளையாட்டு



விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் பெண்கள் ஒற்றையர் முதல் சுற்று ஆட்டத்தில் நடப்புச்சம்பியன் செரினா வில்லியம்ஸ் வித்தியாசமான உடை அணிந்து ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தார். சீன வீராங்கனை ஜீ ஜெங்கை 6-3, 6-1 என்ற நேர் செட்டுகளில் வீழ்த்தி, இரண்டாவது சுற்றுக்கு படு சுலபமாக நுழைந்தார். செரீனாவின் ஆட்டத்தை அவரது சகோதரி வீனஸ் வில்லியம்ஸ் அரங்கில் இருந்து கைதட்டி ரசித்துப் பார்த்தார்.

## முரளிதரன் ஆஸ்திரேலியா செல்வார்

கிரிக்கெட்டைப் பிரபலப்படுத்தும் நோக்குடன் இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் அடுத்த மாதம் ஆஸ்திரேலியாவிற்குச் செல்லவுள்ளார்.

முரளிதரனின் 'தூஸ்ரா' பந்து வீச்சுத் தொடர்பாக ஆஸ்திரேலியப் பிரதமரின் விமர்சனம் உள்ளிட்ட பல காரணங்களுக்காக ஆஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ள டெஸ்ட் போட்டித் தொடரில் முரளிதரன் பங்குபற்றவில்லை.

இதனால் அவரைச் சமாதானப் படுத்துவதற்காக ஆஸ்திரேலியர்கள் கடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன் விளைவாகவே முரளிதரன் ஆஸ்திரேலியா செல்லவுள்ளார். அங்கு அந்நாட்டு அணியின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் ஷேன் வோர்னுடன் இணைந்து நிகழ்வொன்றில் கலந்துகொள்ளவுள்ளார்.

மேற்படி நிகழ்வின்போது ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் முரளி, வோர்ன் இருவரும் புகைப்படங்கள் பலவற்றுக்குப் 'போஸ்' கொடுப்பதுடன் அவற்றில் கையெழுத்திட்டு அவற்றை ரசிகர்களுக்கு வழங்கவுளளனர். (10)

## மூன்று நாடுகள் பங்கேற்கும் ஒருநாள் போட்டித்தொடர் இன்று

இங்கிலாந்து, மேற்கிந்தியா, நியூஸிலாந்து ஆகிய 3 நாடுகள் பங்கேற்கும் ஒருநாள் கிரிக்கெட் சுற்றுப்போட்டி இங்கிலாந்தில் இன்று தொடங்குகின்றது. ஜூலை 10 ஆம் திகதிவரை இந்தப்போட்டி நடக்கிறது. தொடக்க ஆட்டத்தில் இங்கிலாந்து, நியூஸிலாந்து அணிகள் மோதுகின்றன. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா 3 முறை மோத வேண்டும். புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறும். 3 நாடுகள் போட்டி விவரம் வருமாறு:-


ஜூன்24 இங்கிலாந்து-நியூஸிலாந்து, ஜூன்26 நியூஸிலாந்து-மேற்கிந்தியா, ஜூன் 27 இங்கிலாந்து-மேற்கிந்தியா, ஜூன்29 இங்கிலாந்து-நியூஸிலாந்து, ஜூலை1 இங்கிலாந்து-மேற்கிந்தியா, ஜூலை3 நியூஸிலாந்து-மேற்கிந்தியா -

ஜூலை4 இங்கிலாந்து-நியூஸிலாந்து, ஜூலை6 இங்கிலாந்து-மேற்கிந்தியா, ஜூலை8 நியூஸிலாந்து-மேற்கிந்தியா, ஜூலை10 இறுதிப் போட்டி

(10)

உ
சிவமயம்

## மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானம்
## மஹோற்சவ விஞ்ஞாபனம் ~2004



| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | ~ 24.06.2004 | வியாழக்கிழமை |
| சப்பறத்திருவிழா | ~ 02.07.2004 | வெள்ளிக்கிழமை |
| தேர்த்திருவிழா | ~ 03.07.2004 | சனிக்கிழமை |
| தீர்த்தத்திருவிழா | ~ 04.07.2004 | ஞாயிற்றுக்கிழமை |
| கொடியிறக்கம் | ~ 04.07.2004 | ஞாயிற்றுக்கிழமை |
| பூங்காவனம் | ~ 05.07.2004 | திங்கட்கிழமை |
| வைரவர் பொங்கல் | ~ 09.07.2004 | வெள்ளிக்கிழமை |

கோட்டைக்காடு,
மல்லாகம். (33421)(43-13-17-37)

ஆலயபரிபாலன சபை,
இந்து இளைஞர் தொண்டர்சபை.

SRI LANKA RED CROSS SOCIETY
HEALTH AND PSYCHOSOCIAL PROGRAMME - JAFFNA DISTRICT

## VACANCY FOR FINANCIAL ASSISTANT

On the direction of the Director General, National Head Quarters, Colombo; Sri Lanka Red Cross Society, Jaffna Branch is seeking applications for the post of Financial Assistant for the above Programme. Application should, be sent under registered cover to reach on or before 3rd of July 2004. to:

**Director General,**
**C/o. Branch Executive Officer,**
**Sri Lanka Red Cross Society,**
**Jaffna District Branch,**
**No. 73, Kandy Road, Jaffna.**

REQUIREMENTS

**EDUCATIONAL REQUIREMENT:**
University degree or Advanced education certificate in finance and accounting.

**PERSONAL REQUIREMENTS**
- Excellent knowledge of Tamil and English, written and verbal.
- Be aware of the objectives, seven principals and activities of the Sri Lanka Red Cross Society. Red Cross volunteers/ member will be preferred.
- Significant recent experience in accounting and financial management.
- Ability to monitor budgets and plans
- Excellent organizational and interpersonal skills.
- Previous experience in NGO preferred.
- Good computer skills (Word, Excel, Database)

Only short listed candidates will be called for an interview.
**Branch Executive Officer,**
**Sri Lanka Red Cross Society,**
**Jaffna District Branch,**
**No.73,Kanday Road,**
**Jaffna.** (c-35776)(37)

## விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்24

அடுத்த மாதம் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இளையோர் தடகள விளையாட்டு விழாவின ஒருங்கிணைப்புத் தொடர்பான கலந்துரையாடல் இன்று மாலை 5 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்மாவட்ட மெய்வல்லுநர் சங்க நிர்வாக உறுப்பினர்களையும் மெய்வல்லுநர் தொழில் நுட்ப அலுவலர் சங்க நிர்வாக உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தமிழீழ விளையாட்டுக்கழக இணைப்பாளர் கேட்டுள்ளார்.(10-ரி)

## விற்பனைக்கு

ஹோட்டல், கீறீம்ஹவுஸ் என்பவற்றிற்குத் தேவையான சோக்கேஸ், மேசைகள், கதிரைகள் Deepfreeser, கோப்பிவறுக்கும் மின்சார இயந்திரம் (Coffee roster), கோப்பி அரைக்கும் இயந்திரம், (Coffee Grinder), மின் விசிறிகள், சமையல பாத்திரங்கள் உட்பட அனைத்து தளபாடங்களும் விற்பனைக்குண்டு. காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு:-
மு.விமலநாதன்
இல.370, ஆஸ்பத்திரி வீதி,
(வி35775)(37 ) யாழ்ப்பாணம்

## விற்பனைக்கு உண்டு

பழைய வீட்டில் இருந்து கழற்றிய யன்னல், தீராந்தி, ஓடுகள் முதலியன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: க.கபில்
64, புது வீதி,
கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (33415)

## தையல் வேலைக்கு ஆள்தேவை

எமது தையல் கடைக்கு அனுபவ மிக்க தையல் வேலையாள்கள் தேவைப்படுகின்றனர். விரும்புவோர் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

0777 593831
077 6232629 (33383)

## வெளிவந்துவிட்டது!

2004 ஆம் ஆண்டு பாடத்திட்டம்
தரம் - 6
ஆங்கிலப் பயிற்சி நூல்
ஆக்கம்:
திரு. ஆர். பிரேமதாசா




ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்கள்

## தியாகராசா திருஞானம் (ஞானம்)



மந்துவிலைப் பிறப்பிடமாகவும் வரணி இயற்றாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா திருஞானம் அவர்கள் நேற்று (23.06.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சிவயோகத்தின் அன்புக் கணவரும், ஆனந்தி, பிரதாபன் (லண்டன்), கிருபானந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகதாஸ் (கனடா), மதிவதனி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், அஸ்வின், அவனி (லண்டன்) ஆகியோரின அன்புப் பேரனும் செல்வதிசைநாயகத்தின் பாசமிகு சகோதரனும், தவநாயகம் (CDO திருகோணமலை), சிவநாயகம் (மீசாலை விக்கினேஸ்வரா), லோகநாயகி (திருகோணமலை), தேவநாயகம் (சுவிஸ்), விஜயநாயகி (புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி) ஆகியோரின் சிறிய தந்தையும், அன்னபூரணம், சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2004) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வரணி,
இயற்றாலை. (33432)(35-13-17-37)

தகவல்:-
செ.சிவநாயகம்
(பேரமகன்).

## செல்லத்துரை ஐயர் ஜெயவீரராசா ஐயர்



செல்வச்சந்நிதி, தொண்டைமானாற்றைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை ஐயர் ஜெயவீரராசா ஐயர் 21.06.2004 திங்கட்கிழமை முருகனடி சேர்ந்தார்.

அன்னார் மல்லிகாதேவியின் அன்புக்கணவரும் செந்தில் குமரன், வாசுகி, வானதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (24.06.2004) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப 2.00 மணியளவில் காட்டுப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு. (33430)(37-13-17)

தகவல்:
செ.குலவீரராஜா ஐயர்,
(சகோதரன்).

## திருமதி நாகம்மா தம்பிமுத்து



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், அம்பலவாணர் வீதி, அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா தம்பிமுத்து (22.06.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி- இளையபிள்ளை தம்பதியினரின் மகளும், காலஞ்சென்றவர்களான நன்னி- அன்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற தம்பிமுத்துவின் அன்பு மனைவியும், செல்வராசா (பொதுமுகாமையாளர்,ப.நோ.கூ.ச.சங்கானை), குணரட்ணம் (டென்மார்க்), காலஞ்சென்ற விஜயரட்ணம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயமணி, கருணாதேவி (டென்மார்க்)ஆகியோரின் அன்பு மாமியாரும் கபிலன் (4ஆம் வருட விஞ்ஞான பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), கஜீலா (2ஆம் வருட கணிதப் பிரிவு யாழ்தேசிய கல்வியியற் கல்லூரி,) கஜீலன் (பழைய மாணவன், யாழ். இந்துக்கல்லூரி), துஸ்யந்தி (டென்மார்க்), கௌதமி (டென்மார்க்), மெலனி (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2004)வியாழன் முற்பகல் 11மணியளவில் அத்தியடி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41,அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம். (33429)(35-13-17)

தகவல்:
த.செல்வராசா
த.குணரட்ணம் (மகன்மார்).

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
08.06.1955

விண்ணில்
28.03.2004

அமரர்

## சொக்கலிங்கம் பாலச்சந்திரன்

### கிராம அலுவலர் தரம் I (சிறாம்பியடி J/79)



நல்லிதய நெஞ்சினனாய் நன்னெறிகளாற்றி
நளினமொடு நேயமுற்று நட்புரிமைப் பாங்கில்
சொல்லரிய சுகம்பரவச் சோர்விலனாய்ச் சேவை
சொந்தமெனத் தினமுழைத்த கிராமசேவையாளன்
வல்ல பெரும் பண்புமிளிர் இங்கிதமாம் பேச்சில்
வளர்த்ததும் சிறாம்பியடி மக்களது இதயத்
துள்ளவனாய் நீ வளர்ந்து வாழ்வளித்த காலை
மோதியதா லுனையிழந்தோம் மூதிங்க ளிங்கே!

*சேவை விவரம்*

**03.04.1978 - 10.03.1985** பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பாண்டியன்குளம்
**11.03.1985 - 01.01.1989** பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் ஒட்டுசுட்டான்
**02.01.1989 - 04.01.1990** கிராம உத்தியோகத்தர் புதுக்குடியிருப்பு
**05.01.1990 - 01.05.1991** கிராம உத்தியோகத்தர் ஒட்டுசுட்டான்
**02.05.1991 - 28.03.2004** கிராம உத்தியோகத்தர் சிறாம்பியடி (J/79)

அன்னாரை இழந்து ஆறாத்துயரில் மூழ்கி இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம்.

(33435)(37-13-17)

கிராம உத்தியோகத்தர்கள்,
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.

## உங்களுக்கும் புகைப்படத்துறையில் ஆர்வம் உண்டா?

அவ்வாறெனின் புகைப்படத்துறையை பயில விரும்பும் ஆண்கள் தேவை.
*தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:*
கபில் புகைப்படக் கலையகம், இல:72 பலாலி வீதி,
(33442)(36-11-12-36) திருநெல்வேலி. T.P:0776002364



## A/L வணிகக்கல்வி, கணக்கீடு ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்டக் கருத்தரங்கு

அறிமுகப்படுத்தப்பட்டுள்ள (க.பொ.த.உ/தரம்) புதிய பாடத்திட்டத்திற்கான (வணிகக்கல்வி, கணக்கீடு ஆகிய பாடங்களிற்கான) கருத்தரங்கு சிரேஷ்ட விரிவுரையாளர்களால் நடத்தப்படவுள்ளது. எனவே, இப்பாடங்களை கற்பிக்கின்ற சகல ஆசிரியர்களையும், ஆர்வமுள்ளவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இடம்: Ch முகாமைக்கற்கைகள் வணிகபீட விரிவுரை மண்டபம் யாழ். பல்கலைக்கழகம்.
காலம்: 26.06.2004 (சனிக்கிழமை)
நேரம்: காலை 9.00 மணி
குறிப்பு: 1) புதிய பாடத்திட்டத்திற்கான கைநூல் இலவசமாக வழங்கப்படும்.
2) கருத்தரங்கில் பங்குபற்றியோருக்கான சான்றிதழ் வழங்கப்படும்.

தலைவர். வணிக மாணவர் மன்றம்.
(33441)(33-11-12-36) யாழ்.பல்கலைக்கழகம்.



## வெதுப்பகப் பயிற்சி வகுப்பு

பெல்ஜியம் புறாஜ்மன் கம்பனியின் சர்வதேச உணவு உற்பத்தி ஆலோசகர்

**திரு.பொப்** அவர்கள்

கலந்துகொள்ளும் வெதுப்பக பயிற்சி வகுப்பு இன்று (24.06.2004) வியாழக்கிழமை காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை சாவகச்சேரி பைந்தமிழ் வெதுப்பகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ளவர்கள் கலந்துகொள்ளலாம்.

-நிர்வாகம்.
**பைந்தமிழ் வெதுப்பகம்,**
கண்டி வீதி ,
(சி-35781)(36-11-12) சாவகச்சேரி.


## மாநகரசபை ~ யாழ்ப்பாணம்
## மீள் கேள்வி அறிவித்தல் - 2004

மேற்படி என்னால் 05.06.2004 ஆம் திகதி விளம்பரப்படுத்தப்பட்ட 17 வீதி வேலைகளுக்கான கேள்வி அறிவித்தலானது கீழ்வரும் திகதிகளினால் மாற்றப்பட்டுள்ளது.

**கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி: 30.06.2004 பி.ப. 2.30 மணி**
**கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 01.07.2004 பி.ப.2.30 மணி**
**கேள்வி திறந்து பரிசீலிக்கப்படும் திகதி: 01.07.2004 பி.ப. 3.00 மணி**

மேலதிக விவரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

மாநகரசபை.
யாழ்ப்பாணம்.
21.06.2004 (C/35780)(40-11-12-36)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 588 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 22-06-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. | 4753961-4768338 |

வெற்றி இலக்கங்கள்
05 44 50 52

லக்கினம் மிதுனம்

ஜக்பொட் பரிசு ரூபா.10,00,000/- வெஷ்லப்பட்டுள்ளது.
இந்த வெள்ளிக்கிழமை ஜக்பொட் ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 3,20,501 | 10/- | 32,05,010/- |
| 2.இலக்கங்கள் | 29,458 | 20/- | 5,89,160/- |
| 1.இல + லக்கினம் | 29,243 | 30/- | 8,77,290/- |
| 2.இல + லக்கினம் | 2,687 | 100/- | 2,68,700/- |
| 3.இலக்கங்கள் | 780 | 500/- | 3,90,000/- |
| 3.இல + லக்கினம் | 73 | 5,000/- | 3,65,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இல + லக்கினம் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| மொத்தம் | 3,82,746 | - | 69,95,160/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 69,95,160/-

தொடர் இல. 5735234 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2004 ஜூன் 25ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி வெற்றி

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4767068-0-52
4760134-6-87
4758168-5-00
4758449-2-96
4759621-6-55


## சிப்பாய் கீழே வீழ்ந்து மரணம்!

பதுளை, ஜுன்24

தியத்தலாவை இராணுவ முகாமில பயிற்சியில் ஈடுபட்டிருந்த இராணுவ சிப்பாய் ஒருவர் திடீரென கீழே விழுந்து மரணமானார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

தியத்தலாவை இராணுவ முகாமில் கெமுனு பிரிவைச் சேர்ந்த சந்தன ஜனக்க பண்டார என்ற 21 வயதுச் சிப்பாயே மரணமானவராவார்.

நேற்றுக்காலை இராணுவச் சிப்பாய்களுக்கிடையிலே மறைந்திருந்து துப்பாக்கியால் சுட்டு ஓடும் பயிற்சியொன்று இடம்பெற்றவேளையிலேயே, இச் சிப்பாய் திடீரெனக் கீழே விழுந்தார். உடனடியாக இவர் தியத்தலாவை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சில மணிநேரததில் மரணமானார்.

இம்மரணம் தொடர்பாக இராணுவப் பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (க)


## தவறிவிட்டது

பருத்தித்துறை - திருநெல்வேலி பகுதிக்கு இடையில் விநாயகர் உருவம் பொறித்த பென்ரன் (பவுண்) ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்

செ. பாலச்சந்திரன்.
காளிகா சிற்பாலயம்
பத்திரகாளி கோவிலடி
திருநெல்வேலி

என்ற முகவரியில் ஒப்படைக்கவும் - தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C/35787)(38)



## தேவை

சாவகச்சேரியில் இயங்குகின்ற பிரபல நிறுவனம் ஒன்றுக்கு கணக்காளர், வாகன சாரதி ஆகியோர் உடன் தேவை

தொடர்புகளுக்கு:
☎ 0777110530 (C/35782)(40)



## தேவை

றொசானி காமன்ஸ்சுக்கு தையல் தெரிந்த - பெண்கள் தேவை. கட்டிங் வெட்டத் தெரிந்தவர்களும் தேவை.

தொடர்பு:
றொசானி காமன்ஸ்
263/1, இராஜகாரியா லேன்,
(33165) மானிப்பாய்.



## ஆங்கில வகுப்பு

பிரத்தியேக ஆங்கில வகுப்புக்கள் நடைபெறுகின்றன. தனிப்பட்ட முறையில் ஆங்கிலம் கற்க விரும்புவோர்.

தொடர்புகளுக்கு :-
0776503385
(கொழும்பிலிருந்து விசேட பாட நூல்களும் தருவித்து வழங்கப்படுகின்றன) (33431)(35)



**நாகம்ஸ்** சுன்னாகம்

சூர்யா. மாதவன். மீராஜஸ்மின். ஈசா நடித்த



தினசரி: 11.00, 3.00, (C/35739) (12)



**ராஜா** யாழ்ப்பாணம்



விக்ரம், ஜோதிகா நடித்த

காட்சி நேரம்: 10.30. 2.30. 6.30 (பி.நே.) (C/34517) (12)

மீண்டும் அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க 25 முதல்





**லக்சுமி** இணுவில்

அஜித், சிநேகா, ரகுவரன், வையாபுரி, கருணாஸ் நடித்த



(33326) (40)

தினசரி: 11.00, 3.00, 7.00 புதிய நேரம்



**நிறஞ்சனாஸ்** சங்கானை

இன்று முதல்

முரளி, கௌசல்யா, விவேக் நடித்த

காலமெல்லாம் காதல் வாழ்க

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு

EXPOGURE [இரவு 8.45] (C-35653)(12)


# தலையில் காயமடைந்த இளைஞன் மரணம்!

யாழ்ப்பாணம், ஜுன்24

யாழ்.பஸ்நிலையப் பகுதியில் கழிவு நீர்வடிகாலுக்குள் வீழ்ந்து கிடந்ததாகத் தெரிவித்து தலையில் படுகாயமடைந்து, சுயநினைவிழந்த நிலையில் நேற்றுமுன்தினம் முற்பகல் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞன் நேற்றுக் காலை அங்கு மரணமானார்.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதிப் பகுதியைச் சேர்ந்த நடராசா தயாளன்(வயது 23) என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

சடலம் மரணவிசாரணை, பிரேத பரிதோதனையின் பொருட்டு வைத்தியசாலை பிரேத அறையில் வைப்படடுள்ளது. (எ-15)

# மரண அறிவித்தல்கள்

## நடராஜா தயாளன் (சூரன்)



கரம்பன் காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும், கஸ்தூரியார் வீதி, இல.16, கில்னர்லேனை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா தயாளன்(சூரன்) அவர்கள் நேற்று (23.06.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா மற்றும் தர்மபுவதி ஆகியோரின் அன்பு மகனும் தயாபரன் (ஜேர்மன்), தயானந்தன், தயாளினி, தயாரூபன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் தர்சினியின் (நீர்வேலி) மைத்துனரும ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*16,கில்னர் லேன்,*
*கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (33443)(36-11-12)

தகவல்:
குடும்பத்தினர்.

## குமரையா துரைராஜா



(முன்னாள் இலங்கை வங்கி, பிரதிப் பொது முகாமையாளர், ஆலோசகர் - முஸ்லிம் கொமஷல் வங்கி)

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொழும்பில் விசித்து வந்தவருமாகிய குமரையா துரைராஜா அவர்கள் கடந்த 13.06.2004 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சர்வேஸ்வரியின் அன்புக் கணவரும், காஞ்சனாவின் அன்புத் தந்தையும், முகுந்தனின் மாமனாரும், அர்ச்சுனனின் அன்புப் பாட்டனாரும், காலஞ்சென்ற திரு.திருமதி குமரையாவின் மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி சுப்பையாவின் மருமகனும் திருமதி அன்னபூரணி, திருமதி மனோன்மணி, டாக்டர் பாலசுப்பிரமணியம், விஜயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 16.06.2004 புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெற்று பி.ப. 4 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திருமதி ச.துரைராஜா*
*82,A.3/1, லோறன்ஸ் வீதி,*
*கொழும்பு-04*
*T.P.:0112 553701* (33440)(11-12-36)

தகவல்:
சண்முகம் குகபாஸ்கரன்
(குகஸ்தான்),
உடுவில், சுன்னாகம்.

## திருமதி பொன்னையா இராசம்மா



ஆத்திசூடி, கலட்டியைப் பிறப்பிடமாகவும், நாயனமார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா இராசம்மா 22.06.2004 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா அவாகளின் அன்பு மனைவியும், சந்திரதாஸ், சற்குணதாஸ், பிறேமதாஸ், ஞானதாஸ் (குட்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாரதி ஒழுங்கை,*
*செம்மணி வீதி,*
*நாயன்மார்கட்டு.* (33412)(11-12-36)

தகவல்:
ஞானதாஸ்
(குட்டி - மகன்).

## நவரத்தினராசா நிமால்

மட்டுவில், சந்திரபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினராசா நிமால் 22.06.2004 செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் தர்மலிங்கம் - நவரத்தினராசா விமலேஸ்வரியின் பாசமிகு மகனும் கீதா, நவநீதராசா, கரன், ரேவதி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.06.2004) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல ஊரிப்பிட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்திரபுரம்,*
*மட்டுவில்.* (C/35784)(38-11-12-36)

தகவல்:
த.நவரத்தினராசா
(தந்தை).

## சரவணமுத்து பொன்னையா

சங்கானை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து பொன்னையா நேற்று (23.06.2004) புதன்கிழமை இயற்கையெய்தினார்.

அன்னார் சரவணமுத்து - நாகுப்பிள்ளை தம்பதிகளின் மகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் மனோரஞ்சிதம், சுசீலாதேவி ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம், நாகலிங்கம் மற்றும் கனகரத்தினம் ஆகியோரது சகோதரனும் துரைபாலசிங்கம் (கொழும்பு), ஜெயபாலன் (வவுனியா) ஆகியோரது மாமனாரும் அபிராமி, துசாந்தி, சோபன்ராஜ் ஆகியோரது பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சங்கானை கரைச்சி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செலலப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கானை கிழக்கு,*
*சங்கானை.* (33439)(30-11-12-36)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# எதிரணிக் கூட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளின் மீதும் அரசுத் தரப்பின் பார்வையும் நாட்டமும் திரும்பியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை ஆயுதமாகக் கொண்டே, எதிர்க் கட்சிகளின் இக்கூட்டை உடைப்பதற்கு அரசுத்தரப்பு பல பிரயத்தனங்களை மேற்கொண்டு வருவதாக அறியவருகின்றது.

நாடாளுமன்றத்தின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையுடனேயே எதிர்க்கட்சிகள் தாம் சபாநாயகரிடம் கடிதத்தைச் சமர்ப்பித்ததாகக் கூறுகின்றன.

எனினும், ஜுலை 20 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான திட்டமே இது என்று அரசாங்கத் தரப்பில் சந்தேசம் எழுந்துள்ளதாம்.

இதற்கிடையில் எதிரணிக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களின் கூட்டம் நேற்று கொழும்பில் நடைபெற்றது.

ஜுலை 20 திகதிக்கு முன்னரே நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டும் என்று இக்கூட்டத்தில் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி உள்ளன என்று அறியவந்தது.

இதேவேளை, நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற தேரணையில் எதிர்க்கட்சி எம்பிக்கள் அனைவரும் ஒப்பமிட்ட கடிதத்தில் எங்களையும் ஒப்பமிடும்படிக் கேட்டிருந்தால் நாமும் ஒப்பமிட்டிருப்போம் - என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீருவன்ஸ எம்.பி.வெளிப்படையாகவே கூறியுள்ளார்.

கடந்த 8ஆம் திகதி நாடாளுமன்றம் கூடிய போது சபையில் இருந்த செங்கோலைத் தூக்கிக்கொண்டு வெளியே ஓடியவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பிரதியமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே என்பது அனைவரும் அறிந்த விடயம். அதை உறுதிப்படுத்தும் வீடியோப் படக்காட்சிகளும் உண்டு. எனவே, இத்தகைய சந்தர்ப்பதில் இவ்விவகாரம் தொடர்பாக ஒழுங்கு நடிவக்கை ஏதும் எடுக்கும் நிலைப்பாட்டுக்கு நாடாளுமன்றம தீர்மானித்தால் அது விடயத்தில் ஜே.வி.பியினர் காலை வாரிவிடுவார்களோ என்ற நடுக்கம் அரசுத் தலைமைக்கு ஏற்பட்டுள்ளதாம்.

இதனைச் சமாளிப்பதற்காக சிறுபான்மைக் கட்சிகளின் காலைப் பிடித்தவாறு அவர்களின் ஆதரவைப் பெற்று, அரச தரப்பின் பெரும்பான்மையை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கும்படி லண்டனில் இருந்தே ஜனாதிபதி தமது தரப்பினருக்கு உத்தரவிட்டிருக்கிறார் எனக் கூறப்பட்டது.

கருணாவைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தும் முயற்சிக்கு ஐ.தே.கட்சியினர் தான் அதிகம் ஒத்துழைத்தார்கள் என்ற குற்றச்சாட்டு வெளியாகியுள்ள நிலையில் அதனையே ஒரு துரும்பாகக் கொண்டு தமிழ்க் கட்சிகளுடன் பேசும்படியும் அரசுத் தலைமை தனது தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதன் அடிப்படையிலேயே கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தலைமையிலான குழுவினா இ.தொ.காவின் ஜுனியர் எம்.பிமார் சிலருடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர்.

ஏற்கனவே, அரசில் சேர்வதற்கு வெகுமதியாக இ.தொ.கா. கேட்ட இரண்டு அமைச்சுக்களுக்குப் பதிலாக ஓர் அமைச்சுப் பொறுப்பையும், ஒரு பிரதியமைச்சர் பதவியையும் வழங்க அரசு முன்வந்துள்ளதாக அப்போது கூறப்பட்டதாம்.

எனினும், ஜனாதிபதி முறை ஒழிக்கப்படமாட்டாது என்று உறுதி வழங்கப்பட வேண்டும் என்று இ.தொ.கா. கோருவது குறித்து திட்டவட்டமான பதில் எதும் அரச தரப்பில் இந்தச் சந்திப்பின்போது தெரிவிக்கப்படவில்லையாம்.

அரச தரப்பு தற்போது வழங்க முனவந்துள்ள சலுகைகள் குறித்து இதொ.காவின் ஜுனியர் எம்.பிக்கள் இ.தொ.கா. தலைவரிடம் எடுத்துக் கூறினர் என்றும் தெரிகின்றது.

எனினும், இந்த விடயம் தொடர்பாகத் திட்டவட்டமான பதில் எதையும் தராமலேயே இ.தொ.கா. தலைவர் இந்தியா சென்றுவிட்டார்.

தற்பொழுது ஏதாவது பதிலைக் கூறினால் அது மாகாணசபை தேர்தலைப் பாதிக்கும் என்பதால், மாகாணசபைத் தேர்தலின் பின் தமது நிலைபாட்டை அறிவிப்பார்கள் என இ.தொ.கா. ஜுனியர்கள் அரச தரப்பினரிடம் கூறியுள்ளனர் எனத் தகவல்கள் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

## பொல்காவலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரம் 11 இல் கற்பவர்கள் ஆவர்.

பஸ் சாரதியும், உரிமையாளரும் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் எனக் குருநாகல் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ரவி விஜயகுணவர்த்தன தெரிவித்தார். (எ)

## போலி ஆவண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பவற்றின் கடிதத் தலைப்புக்கள், ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்கள் என்பனவும் இறப்பர் முத்திரைகளும் அந்த வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

யாழ். ஆஸ்பத்திரி மற்றும் நீதிமன்றங்களின் ஆவணங்களும், சமாதான நீதிவான்கள், கிராம அலுவலர்கள போன்றோரால் விநியோகிக்கப்படும் சான்றிதழ்கள் மற்றும் அடையாள அட்டைகள், வர்த்தக நிறுவனங்களின் சிட்டைகள் என்வற்றையும் அந்த நபரிடமிருந்து பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை சான்றிதழ்கள், பரீட்சைகள் திணைக்கள சான்றிதழ்கள், வாகன அனுமதிப்பத்திரங்கள் என்பனவும் மீட்கப்பட்ட போலி ஆவணங்களில் அடங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வளவு தொகையான போலி ஆவணங்கள் ஒன்றாக, ஒரே இடத்தில் கைப்பற்றப்பட்டிருப்பது குடாநாட்டில் இதுவே முதல் முறை என்று பொலீஸ வட்டாரங்கள் தெரிவித்தன.

கைதுசெய்யப்பட்ட ஆறுமுகம் ஜோசப் சில்வானஸ் என்பவர் தனது இல்லத்தை போலி ஆவணங்களை விநியோகிக்கும் ஒரு 'மினி கச்சேரி' போன்று நடத்திவந்திருப்பதும் விசாரணைகள் மூலம் தெரியவந்திருக்கிறது.

குற்றச்செயல் ஒன்றுடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவரைப் பிணை எடுப்பதற்காக சான்றிதழ் ஒன்றில் ஒப்பம் பெறுவதற்காக யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துக்கு வந்த நபர் ஒருவர் வைத்திருந்த ஆவணத்தில் எழுந்த சந்தேகமே இந்தப் பெரும் மோசடிச் செயலை அம்பலப் படுத்தியிருக்கின்றது.

பிரஸ்தாப நபர் வைத்திருந்த ஆவணத்தைப் பார்வையிட்ட கிராம அலுவலர் ஒருவர் அது போலியானதாக இருக்கலாம் எனச் சந்தேகித்து உடனடியாகப் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்தார் என்றும் -

இதனையடுத்து பொலீஸார் அந்த நபரையும், சான்றிதழ்களில் ஒப்பம் பெறவந்த வேறு பலரையும் விசாரணை செய்தபோது இந்தப் போலிச் சான்றிதழ் விநியோகிக்கும் மோசடி பற்றித தெரியவந்தது எனவும் -

கூறப்படுகிறது.

இந்தத் தகவலின் அடிப்படையில விரைந்து செயற்பட்ட பொலீஸார், அரியாலை புங்கன்குளம் பகுதியில் 'மினி கச்சேரி' இயங்கிவந்த வீட்டை முற்றுகையிட்டு அந்த நபரைக் கைதுசெய்தனர்.

யாழ். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆனந்த செனிவிரத்னவின் பணிப்பின்பேரில் குற்றவியல் பிரிவுப் பொறுப்பதிகாரி எச்.எம்.விக்ரமரத்ன மற்றும் உதவிப் பொறுப்பதிகாரி விதானகே ஆகியோர் தலைமையில் சென்ற பொலீஸ் குழுவே இந்த முற்றுகையை மேற்கொண்டது.

கைதுசெய்யப்பட்ட நபர் நேற்று மாலை யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை அடுத்த மாதம் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த நபருக்கு போலி இறப்பர் முத்திரைகளைத் தயாரித்து வழங்கியவர் எனக் கூறப்படும் மற்றொரு நபரான தில்லையம்பலம் செல்வராசா என்பவரும் கைதுசெய்யப்பட்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7)

## எம்.பி.பதவியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் என்று கருதப்பட்ட தமிழரசுக கட்சி எம்பிக்கள் நால்வருடனும் தமகிருந்த தொடர்பை ஐ.தே.க. தலைமைக்குக் காட்டியே அக்கட்சியின் தேசியப்பட்டியல் எம்பி. பதவியை அலி சாஹிர் மௌலானா பெற்றார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த விவகாரம் பூதாகரமானதை அடுத்தே அந்தப் பதவியைத் துறந்ததன் மூலம் கட்சியின் தலைமைக்கு நெருக்கடி ஏற்படாமல் காப்பாற்றியிருக்கின்றார் மௌலானா என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் -

அலி ஸாஹிர் மௌலான, கருணாவுடன் தொடர்பு வைத்த செயற்பாட்டுக்காக அவருக்கு எதிராக கட்சி ரீதியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கின்றது என்றும் -

அவரை எம்.பிப்பதவியில் இருந்து இராஜினாமாச் செய்யும்படி கட்சி கோரியிருக்கின்றது என்றும் -

ஐ.தே.கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் விடுதலைப் புலிகளின் தலைமைக்கு நேற்று மதியம் தகவல் தெரிவித்தனர் என்றும் நம்பகரமாக அறியவந்தது.

(க-9-13)

# ஐ.தே.கட்சி எம்.பி. ரவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலதிக தகவல் எதையும் அவர்கள தரவில்லை.

பொலீஸார் ரவி கருணாநாயக்கா வீட்டுக்குச் சென்றிருப்பதை அறிந்து ஐ.தே.கட்சிப் பிரமுகர்களான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் எம்.பி, எஸ்.பீ. திஸநாயக்கா எம்.பி., மஹிந்த சமரசிங்க எம்.பி, கட்சியின் பிரதித் தலைவர் கரு.ஜெயசூரிய எம்.பி. போன்றோரும், ரவி கருணாநாயக்கவின் சட்டத்தரணி அருள் பிரகாசமும் அங்கு விரைநதனர்.

எந்தச் சட்டத்தின் கீழ் - அல்லது எந்த நீதி மன்ற உத்தரவின் கீழ் - அல்லது என்ன காரணத்துக்கு - ரவி கருணநாயக்கவை கைதுசெய்ய அலலது கூட்டிப் போக பொலீஸ் அதிகாரிகள் முயல்கின்றனர் என சட்டத்தரணி அருள் பிரகாசம் அவர்களிடம் கேட்டார்.

ஆனால், காரணத்தை கூறவோ, நீதிமன்ற உத்தரவு எதனையும் சமர்ப்பிக்கவோ மறுத்த பொலீஸ் அதிகாரிகள் ரவி கருணாநாயக்க தம்முடன் வரவேண்டும் எனப் பிடிவாதம் பிடித்தனர். ஆனால் அப்படிக் கோருவதோ, அவரைப் பலவந்தமாகக் கூட்டிச்செலவதற்கோ சட்டரீதியானது அல்ல என்று தெரிவித்து அதற்கு அனுமதிக்கமுடியாது என ரவி கருணாநாயக்கவின் சட்டத்தரணிகளும் ஏனைய பிரமுகர்களும் விடாப்பிடியாகத் தெரிவித்தனர்.

சுமார் ஒரு மணி நேரம் ரவி கருணாநாயக்க வீட்டில் இவ்வாறு இழுபறிப்பட்ட பொலீஸ் அணி பின்னர் வேறு வழியின்றிஅவரைக் கைதுசெய்ய முடியாத நிலையில் வெறுங்கையுடன திரும்பிச்சென்றது.

அதனையடுத்து அங்கு பேராசிரியர் ஜீஎல்பீரிஸ் செய்தியாளர் மாநாடு ஒன்று நடத்தினார். அப்போது அவர் கூறியதாவது:-

இங்கு இடம்பெற்ற சம்பவங்கள் முற்றாக சட்டத்தை மீறும் நடவடிக்கைகளாகும். நீதிமன்ற உத்தரவோ, பிடியாணையோ இல்லாமல் - காரணம் ஏதும் தெரிவிக்காமல் - ரவி கருணாநாயக்கவைக் கைது செய்யப் பொலீஸார் முயன்றிருக்கின்றனர்.

எமது கட்சியின் தலைவர் கரு ஜெயசூரிய இது குறித்து பொலீஸ்மா அதிபருடன் தொடர்புகொண்டு கேட்டுள்ளார். பொலீஸ்மா அதிபருக்கு இந்த விடயம் தெரிந்தே இருக்கவில்லை. பொலீஸ் திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சின் மூத்த அதிகாரிகளுக்குக் கூட எதுவும் தெரியவில்லை. இந்த நாட்டில் காட்டு மிராண்டித்தனமான ஆட்சி நடப்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது - என்றார் அவர். (க)

# ஐ.தே.கட்சித் தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப் பட்டியல் எம்.பி.அலி ஸாஹிர் மௌலானா உதவியதோடு அவர்களுக்குப் பாதுகாப்பாகவும் இருந்துள்ளார் எனவும் அண்மையில் ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தமை தெரிந்ததே.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குள் அமைப்பு ரீதியாக ஏற்படும் உள்வீட்டுப் பிரச்சினைகளுக்கு அவர்களாகவே தீர்வுகாண வேண்டும். வெளியார் அதில் தலையிடக் கூடாது என்பதே ஐ.தே.கவின் கொள்கை.

நாம் ஆளும்தரப்பில் இருக்கும் போது - இன்று எதிரணியில் இருக்கின்றபோதும் - எமது கொள்கையில எந்தவிதமான மாற்றமும் இல்லை.

யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்கள என்ற வகையில் சமாதானப் பேச்சு அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலேயே நடைபெற வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

எனினும், அலிஸாஹிர் மௌலானா விடயம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை, தனிப்பட்ட முறையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது- என்று அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

(க)

## கண்ணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காதீர்!

★ சிறுவர்களுக்குத்தேவை விளையாட்டு மைதானம். கண்ணிவெடி மைதானம் அல்ல!

★ பாதிக்கப்பட்டோருக்கு உடன் நிவாரணம் வழங்குக!

(ஐ-72-173-180)


**பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை—கொழும்பு**

**மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் மட்டும் இன்றும் (24.06.2004) நாளையும் (25.06.2004) 'உதயன்' பணிமனைக்கு நேரில் வரவும். சம்பளம் ரூபா 5,000இற்கு மேல். தங்குமிட வசதியும் வழங்கப்படும். கொழும்பு போக்குவரத்துப் பாதைகள் பற்றி அறிந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.**

தொடர்புகளுக்கு:

**உதயன் கேட்போர் கூடம்,**

361, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம். (C/35785) (11-12-33)


# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை கந்தசாமி

காரைநகர் சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஓமந்தை, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தசாமி அவர்கள் நேற்று (23.06.2004) புதன்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பாக்கியம், காலஞ்சென்ற பழனியாண்டி, காலஞ்சென்ற சீதாலட்சுமி, தியாகராசா, காலஞ்சென்ற செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (27.06.2004) அன்று ஓமந்தையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வேலுப்பிள்ளை தியாகராசா (சகோதரர்).

(33444) (11-12-33)

## துரைசிங்கம் தர்மபூபதி

சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட துரைசிங்கம் தர்மபூபதி நேற்று (23.06.2004) புதன்கிழமை மாலை காலமானார்.

அன்னார் துரைசிங்கத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற செல்லத்தம்பி பொன்னம்மா தம்பதிகளின் மகளும் ஷாந்தினி (தாதிய உத்தியோகத்தர், சங்கானை அரசினர் வைத்தியசாலை), துஷ்சயந்தன் (பிரான்ஸ்), கயசிந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2004) வியாழக்கிழமை 2மணியளவில் அன்னாரில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.* (C/35789) (11-12-33)

தகவல்:
கணவர்.


**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

★ CHARTERED FOUNDATION & INTERMEDIATE-JANUARY 2005

★ aat-STAGE II - DECEMBER 2004

50% கட்டணக் கழிவு

இச் சலுகை 11 JULY 2004 வரை மட்டுமே

உடன் பதிவுகளுக்கு

**IPAS**
199, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(பிறிமியர் பேக்கரி மேல்மாடி)
☎ 0777-563294, 563292

அலுவலக நேரம்:-
திங்கள், வெள்ளி, தவிர்ந்த ஏனைய நாள்களில் தினமும் காலை 9.00 - பி.ப. 1மணிவரை.

(C/35770)(43-11-12-33)

**30%**

இச் சலுகை ஜுன் 30 வரை மட்டும்

கட்டணச் சலுகையுடன் ஒரு பயிற்சி நெறியினை தொடர்வதன் மூலம் ஏனைய பயிற்சி நெறிக்கு பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.

DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE XP 925/=
DIPLOMA IN DESKTOP PUBLISHING 1625/=
DIPLOMA IN COMPUTER PROGRAMMING 3690/=
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING 2220/=
DIPLOMA IN VISUAL BASIC 1275/=
DIPLOMA IN VISUAL FOXPRO 1275/=
DIPLOMA IN AUTOCAD 1675/=
DIPLOMA IN C++ 1800/=
DIPLOMA IN NETWORK ENGINEERING 3725/=

**பிரிவு III ஆரம்பம் 27.06.2004**

**Softview Computer College**

www.scclanka.com
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170

scclanka@hotmail.com
Arya Gowdar Road,
West mambalam Road,
Chennai 600 033, India.
T.P: +91-44-4891286


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.06.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.